LIBRARY
9 APR 1962
STATE LEGISLATURE

MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, 23rd September 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half-past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Prices of chillies, etc. (Tiruchirappalli district)

* 1736 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் மிளகாய், கரும்பு, எண்ணெய் போன்ற பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதா?

(இ) அப்படியானால் மற்ற மாவட்டங்களிலும் விலை நிர்ணயம் செய்யும் உத்தேசமுண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir, except in the case of sugarcane sold to sugar factories.

(b) Does not arise.

SRI S. M. ANNAMALAI : அத்தியாவசியமான பொருள்களின் விலைகள் ஏறிக்கொண்டே போகிறதே. வருங்காலத்தில் எல்லாப் பொருள்களையும் கட்டுப்பாடு செய்வதற்கு அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விலைக் கட்டுப்பாடு செய்வதென்றால் எல்லாவற்றிற்கும் கட்டுப்பாடு செய்வதற்கில்லை. அத்தியாவசியமான பொருள்களுக்குத்தான் கட்டுப்பாடு செய்யவேண்டும். மற்றப் பொருள்களுக்குக் கட்டுப்பாடு செய்வதாக இல்லை.

SRI V. K. KOTHANDARAMAN : திருச்சியில் நடந்த தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் விலை நிர்ணயம் செய்வதற்காக ஒரு கமிட்டி அமைக்கப்பட்டது கனம் அமைச்சருக்கும், இந்தச் சபைக்கும் தெரியுமே. அதேபோன்று விலை நிர்ணயம் செய்வதற்கான ஏற்பாடு ஏதாவது உண்டா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர்கள் காங்கிரஸில் இல்லை. அவர்கள் தமிழ்நாடு காங்கிரஸில் சேர்ந்து இந்தக் கேள்வி கேட்டால் அதற்கு பதில் கிடைக்கும்.

SRI R. SRINIVASA IYER : அத்தியாவசிய பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறதே, கட்டுப்பாடு என்று சொன்னால் அப்போது மக்களிடம் கிடைக்காமல் பிளாக்மார்க்கெட்டில் விற்கிறார்கள். ஆகையால் சாமான்கள் எல்லோருக்கும் கிடைப்பதற்கான அளவில் கட்டுப்பாடு செய்வார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இப்பொழுது மிளகாய் விலை குறைந்திருக்கிறது. எண்ணெ விலை குறைந்திருக்கிறது. ஆலைக்குக் கொடுக்கப்படும் கரும்புக்கு மாத்திரம்தான் விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்போது கட்டுப்பாடு செய்வதற்கு உத்தேசம் இல்லை.

[23rd September 1961

SRI N. R. THIAGARAJAN : அரிசி விலையும் மற்ற விளைபொருள்களின் விலையும் குறைந்துக்கொண்டே போனால் விவசாயிகளைப் பாதிக்காதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரிசி போன்ற பொருள் களின் விலை குறைந்தால், விவசாயிகளுக்கு பாதகம் ஏற்படாத அளவிற்கு அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்.

SRI S. RAMALINGA PADAYACHI : அரியலூரில் 30, 40 ரூபாய் விற்றமிளகாய் இப்பொழுது 22 ரூபாய் அளவிற்கு குறைந்து போய்விட்டது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுவதினால், அரசாங்கம் தலையிட்டு விலையை உயர்த்துவதற்கு முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மிளகாய் விலை குறைந் திருக்கிறது. சும்மா கொடுத்தால்கூட வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்வார்கள். யாருக்கும் உற்பத்தி செய்வதின் கஷ்டம் தெரியாது.

Long distance bus routes—Nationalization of

* 1737 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalise all the long distance bus routes in the State; and

(*b*) if not the reasons for the same?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The policy of the Government is to take over gradually long distance routes over 120 miles not involving displacement of operators and for which there is adequate traffic prospects.

SRI A. A. RASHEED : Sir, may I know whether any time-limit has been fixed for this nationalization?

THE HON. SRI V. RAMAIAH : No, Sir.

SRI M. KALYANASUNDARAM : ஏற்கனவே இருக்கக்கூடிய ஆபரேடர் களுக்குக் குந்தகம் ஏற்படாமல் எடுத்துக்கொள்வதற்குதான் தேசிய மயமாக்குவது என்று பெயரா?

THE HON. SRI V. RAMAIAH : கவர்ன்மெண்டின் புது முடிவு இது வரையில் பிரைவேட் செக்டாரில் கொடுக்கும் ரூட்டுகளில் நாமே புது பஸ்கள் விடவேண்டும் என்பதுதான். இந்த முடிவுப்படி முன்னதாக லாங் ரூட்டுகளை எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதுதான்.

SRI M. KALYANASUNDARAM : Sir, there is another question on the same subject, viz., 1790-A. That can also be taken up along with this question.

DEPUTY SPEAKER : Yes.

Transport (Nationalization)

* 1790-A *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal to nationalize bus-transport in the State during Third Five-Year Plan period; and

(*b*) if so, the details of the same?

23rd September 1961]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) There is no change in the Government's policy of progressive nationalization of Road Transport.

(*b*) There is no such programme for Thrid Five-Year Plan. Specific decisions will be taken by Government from time to time.

SRI N. K. PALANISAMI : Sir, While the Andhra Government and every other State Government except this Government have nationalized bus-transport, why is it that our Government have not undertaken this?

THE HON. SRI V. RAMAIAH : We take decisions according to our experience and according to the circumstances prevailing in our State.

SRI K. VINAYAKAM : Are the Government aware of the fact that nationalization of these bus routes in a few districts in Andhra Pradesh has not proved a very successful enterprise. Will the Government therefore take a lesson and desist from any temptation to nationalize these bus routes in the Third or Fourth Five-Year Plans?

THE HON. SRI V. RAMAIAH : Sir, I have no information as to the position that is obtaining in the neighbouring States.

SRI M. KALYANASUNDARAM : ஒரே மார்க்கத்தில் தனியார் ஏராளமான பஸ் விட்டு அரசாங்கமும் ஏராளமான பஸ் விடுகிறது. இதனுல் தனியார் குறைந்துவிடுவார்கள் என்பது அரசாங்கத்தின் நோக்கமா?

THE HON. SRI V. RAMAIAH : புது முடிவின்படி நாம் எடுத்துக் கொள்வதெல்லாம் 120 மைல்களுக்கு மேல் இருக்கும் ரூட்டுகள்தான். அந்த ரூட்டுகளிலே மற்றவர்களுக்கு இடம் இருக்காது.

SRI S. M. ANNAMALAI : குறுகிய தூர பஸ்கள் விடுவது சர்க்காரின் கொள்கையாக இருந்ததே, அதை மாற்றிக்கொண்டதற்குக் காரணம் என்ன?

THE HON. SRI V. RAMAIAH : திரும்பவும் பரிசீலனை செய்தபோது நீண்ட தூர பஸ் விடுவது அரசாங்கத்திற்கு லாபகரமாகவும், ஜனங்களுக்கு சௌகரியமாகவும் இருப்பதால் இந்த மார்க்கத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

SRI M. KALYANASUNDARAM : நீண்ட தூர பஸ் விடுவதை அரசாங்கம் 'மொனுபலி'யாக எடுத்துக்கொள்கிறபோது, குறுகிய தூர பஸ்களையும் விடுவதற்கு உத்தேசம் இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : 120 மைல்கள் உள்ள ரூட்டுகளில் அரசாங்கம் பஸ் விடுவதற்கு முடிவு செய்திருக்கிறது. அந்த ரூட்டுகளை 'மொனுபலி' ஆக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய முடிவு.

Washing soda

***1738 Q.—SRI V.K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது ராஜ்யத்தில் வாஷிங் சோடா உற்பத்தி செய்ய உத்தேசமுண்டா ?

(இ) அப்படியானால் எப்போது, எங்கே ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) & (இ) An entrepreneur has recently applied to the Government of India for the grant of a licence under the Industries (Development and Regulation) Act, 1951 to establish a soda ash factory in the Chingleput district.

Cauvery Delta—Seismic Survey of

* 1739 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state the result of the seismic survey conducted in the Cauvery delta of Tiruchirappalli to exploit oil?

THE HON. SRI V. RAMAIAH : The seismic survey on the Cauvery delta was started in September 1960 and is in progress. The report on the survey has not yet been received from the Oil and Natural Gas Commission.

SRI N. K. PALANISAMI : Recently the Hon. Minister in charge of the subject stated in the Lok Sabha that the seismic survey conducted in the Cauvery delta was very useful. Has our Government not received the report? If so, may I know whether our Government is not concerned with any of those activities?

THE HON. SRI V. RAMAIAH : Our Government is vitally concerned and is pressing and with the active support of this Government, the survey is being conducted. We expect an interim report will come out very soon.

SRI R. SRINIVASA IYER : 1961-ம் வருஷம் மே மாதத்தில் வந்த கரண்டு சையன்ஸ் என்ற பத்திரிகையில் காரைக்காலில் இருந்து மண்டபம் வரையில் காவேரி டெல்டா ஏரியாவில் நிறைய இடத்தில் எண்ணெ இருக்கிறதாகவும், அதிலே காரைக்கால் பகுதியிலே மிக நிறைய இருப்பதாகப் படத்துடன் பிரசுரமாகியிருப்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதன் பேரில் உண்மையாக எங்கெங்கு இருக்கிறது என்பதை பரிசீலனை செய்யப் பட்டதா ? எவ்வளவு ஆழத்தில் இருக்கிறதென்பதும் பரிசீலிக்கத் திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : அதற்கெல்லாம் தான் சர்வே நடந்து கொண்டிருக்கிறது.

Catering College

* 1740 *Q.*—SRI A. A. RASHEED : } SRI S. M. ANNAMALAI } : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal to start a catering college in our State; and

(*b*) if so, where?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) In Madras City, as an ancillary institution to the Central Polytechnic, Madras, during the Third Five-Year Plan period.

23rd September 1961]

SRI S. M. ANNAMALAI : இந்தக் கலைக் கல்லூரி ஆண்களுக்கு மட்டுமா ? அல்லது பெண்களுக்கும் சேர்த்து நடத்தப்படுகிறதா ? அப்படியானல் இங்கே என்ன என்ன தொழில்கள் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆண்களுக்குமட்டும், என்றும் பெண்களுக்கு மட்டும் என்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழ் பிரிக்கமுடியாது. ஆகவே இந்தப் பிரச்சனை எழவில்லை. யார் வேண்டுமானாலும் வந்து சேரலாம்.

The model scheme provides for admission of 100 full-time students for three years. Seventy part-time students for one year and 80 full-time students for one year.

SRI A. A. RASHEED : May I know when this college will be opened and what is the estimated cost of this college?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I have just now stated that it will be attached to the Central Polytechnic. The non-recurring expenditure will be Rs. 4·5 lakhs on buildings, Rs. 2·3 lakhs on equipments and Rs. 3 lakhs on hostels and other staff quarters. In all Rs. 9·8 lakhs will be the non-recurring expenditure. The recurring expenditure will be to the extent of Rs. 1,15,000 after deducting income from fees, etc.

SRI S. RANGANATHA MUDALIAR : Are any qualifications or restrictions in age prescribed for admission of students to this college?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : All this is being looked into.

Housing schemes

* 1741 Q.—**SRI N. R. THIAGARAJAN :** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1960–61-ல் மத்திய சர்க்காரிலிருந்து நமது ராஜ்ய சர்க்காருக்கு வீடுகள் கட்ட கூட்டுறவு இலாகாவுக்கு கிடைத்த பணம் எவ்வளவு ?

THE HON. SRI V. RAMAIAH : Under the Low Income Group Housing Scheme a loan of Rs. 29·66 lakhs was received from the Government of India during 1960-61, while, under the Subsidised Industrial Housing Scheme, a loan of Rs. 15.88 lakhs and a subsidy of Rs. 3·21 lakhs were received, towards construction of houses by Co-operative Housing Societies.

SRI N. R. THIAGARAJAN : இந்தப் பணம் எங்கெங்கு விநியோகிக்கப் பட்டிருக்கிறது? இதற்கான வட்டி விகிதங்கள் என்ன? சென்னை சர்க்கார் கொடுக்கும் பணத்திற்கும், மத்திய சர்க்கார் கொடுக்கும் பணத்திற்கும் வட்டி விகிதாசாரம் என்ன என்ன கணக்கிடப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH : எங்கெங்கே விநியோகம் செய்யப்பட்டது என்பதற்கு என்னிடத்தில் தகவல் இல்லை.

Loans are repayable in a period not exceeding 30 years with interest at 4 to $4\frac{1}{2}$ per cent per annum depending upon the period of repayment. Short-term loans are also granted to local bodies including the Madras Corporation and the Madras Housing Unit

[23rd September 1961

for acquisition and development of house-sites for sale to eligible persons on a 'no-profit-no-loss' basis. The loans are repayable in 3 to 5 years with interest at 3¼ to 3-5/8 per cent per annum.

SRI A. R. SUBBIAH MUDALIAR : கொடுக்கப்பட்ட தொகையைச் செலவழிக்க முடியாமல் சட்டச் சிக்கல்—அதாவது மாகாண ரீதியில் வேறு எங்காவது ஒரு வீடு இருந்தால் கூட்டுறவு அடிப்படையில் புது வீடு கட்ட தொகை வாங்க முடியாது என்று இருப்பதனுல்—ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்க முடியாமல் இருப்பது தெரியுமா? அந்தச் சிக்கலை நீக்க ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் சொல்வது புதுச் சிக்கலாக இருக்கலாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட பணம் பூராவும் செலவு செய்யப்பட்டிருக்கிறது.

Houses for Government Servants

* 1742 Q.—SRI M. P. SARTHI : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரசாங்க ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி அளிக்க என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன?

(இ) இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குச் சுற்றறிக்கை விடப் பட்டுள்ளதா?

(உ) அதன் விவரமென்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Under the Rental Housing Schemes for low paid employees of the State Government introduced by the Government of India, 500 houses have been constructed at Santhome in the Madras City. More quarters are under construction in Todhunternagar, Kilpauk and Santhome. It is also proposed to put up rental houses in Tiruchirappalli, Madurai, Coimbatore, Tirunelveli and other district Headquarters in the State.

(இ) & (உ) A circular has been issued to the District Collectors to submit proposals to the Chairman, State Housing Board, for construction of at least 50 houses in each district under the scheme.

SRI K. VINAYAKAM : Was there not a proposal to construct these small houses for non-gazetted officers and fourth grade servants of Government in Kodambakkam under the Madras Housing Unit?

THE HON. SRI V. RAMAIAH : For the benefit of last grade servants of Madras Government, in Madras City, a special project for housing 200 of them on open developed plots at Kodambakkam-Puthur has been sanctioned.

SRI P. G. MANICKAM : ஜில்லாக்களிலே கட்டப்படப்போகும் ஒவ்வொரு வீட்டுக்கும் எவ்வளவு ரூபாய் தேவைப்படும்? ஒவ்வொரு வீடும் எவ்வளவு வாடகைக்கு விடப்படும்?

THE HON. SRI V. RAMAIAH : இப்போதுதான் திட்டமே உருவாகிக் கொண்டிருக்கிறது.

23rd September 1961]

Recruitment of women for Police force

* 1743 Q.—SRI S. M. ANNAMALI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேளுவிக்குப் பதிலளிப்பாரா—

இதுவரை எத்தனை பெண்கள் போலீஸ் வேலைக்காக எடுத்துக்கொள் ளப்பட்டனர்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Recruitment to Women Police has not yet been made.

Synthetic gems—Industrial Co-operative for workers

* 1744. Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the details of the scheme for organising Industrial Co-operative for the workers engaged in polishing synthetic gems in Tiruchirappalli district; and

(b) the number of workers to be covered during the current year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The Government have sanctioned recently a scheme for the organisation of an Industrial Co-operative Society for the synthetic gem cutters at Tiruchirappalli. The scheme involves a capital expenditure of Rs. 5,71,000 and a recurring expenditure of Rs. 25,800 per annum. A loan of Rs. 3,66,000 and the free services of staff have been sanctioned to the Co-operative Society. The scheme aims at bringing into the Co-operative fold all the 24,000 workers in the district who are engaged in the industry.

(b) One thousand, six hundred workers.

State Agricultural Advisory Board

* 1745 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாநில விவசாய ஆலோசனை போர்டு ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

(இ) அப்படியானல், அதன் வேலை என்ன? யார் யார் உறுப் பினர்கள்?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A paper [a] is placed on the table of the House.

SRI S. M. ANNAMALAI : அந்த அட்வைஸரி போர்டின் ரிப்போர்ட் இது வரையில் ஏதாவது சர்க்காருக்குக் கிடைத்திருக்கிறதா? அந்த போர் டில் ஏன் மாற்றுக்கட்சிக்கயாரை நியமிக்கவில்லை? மாற்றுக் கட்சியாரை நியமிக்கக்கூடாது என்பது சர்க்கார் கொள்கையா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த போர்டை அமைத் தது கட்சியைப் பார்த்து அல்ல. விவசாயிகளைப் பார்த்துத்தான் அமைக்கப் பட்டது. ஒரு கூட்டம்தான் நடந்தது. ரிபோர்ட்டு என்று ஒன்றும் இல்லை. அந்தக் கூட்டத்தின் நடவடிக்கை இருக்கிறது. கனம் அங்கத்தினர் கோரினல் அது சமர்ப்பிக்கப்படும்.

[a] Printed as Appendix I on page 592 infra.

[23rd September 1961

Agricultural labourers

* 1746 Q.—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வேளாண்மைத் தொழிலாளர்களின் மோசமான வேலை நிலைமை குறைவான வாழ்க்கை நிலைமை முதலியவைகளை தீர்த்து வைக்க சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

(இ) எப்பொழுது முதல், விவரமென்ன?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) The characterisation made in this part of the question is not accepted.

(*b*) The schemes now being implemented by the Government in the Community Development and National Extension Service areas and through Co-operative Societies are designed to benefit, along with others, the agricultural workers and the ryots in general. No scheme for the exclusive benefit of the agricultural workers is under the consideration of the Government.

Sri V. K. KOTHANDARAMAN : இரண்டு நாளைக்கு முன்னால் மேஜையின்மேல் வைக்கப்பட்ட ஸ்டேட்மெண்டில் கூறப்பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளருடைய வருவாய் 1951-ஆம் ஆண்டில் இருந்ததைவிட 1959–60-ல் 4 சத விகிதம் குறைவு என்று. இந்தமாதிரியான நிலைமையில் விவசாயத் தொழிலாளர்களுடைய மோசமான நிலைமையைப் போக்குவதற்கு எந்த வகையில் தீவிரமான நடவடிக்கை எடுக்க சர்க்கார் முயற்சி செய்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இரண்டு நாட்களுக்கு முன்னால் கொடுக்கப்பட்ட புள்ளி விவரத்தில் விவசாய தொழிலாளர்களுடைய குறைந்தபட்சக் கூலி விகிதம் அதிகமாயிருக்கிறது என்றே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நிலம் இல்லாத விவசாயிகள் குத்தகை கூட்டுறவுச் சங்கங்களிலே பயிரிடுகிறார்கள். நிலம் இல்லாவிட்டாலும் பயிரிடுகிறவர்களுக்கு கடன் வசதி கொடுக்கப்படுகிறது. காலனி சொசைடிகளில் அவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இன்னும் பால் பண்ணை, கோழிப் பண்ணை முதலான வசதிகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பல வழிகளில் அவர்கள் நலன் கவனிக்கப்பட்டுத்தான் வருகிறது.

Oil (Russian)

* 1747 *Q.*—Sri N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether the Centre has requested this Government to get cheap Russian oil for Government purposes; and

(*b*) the sources from which oil is obtained for our transports and how?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) At present, H.S.D. oil is purchased from—

(i) Messrs. Burmah Shell Oil Storage and Distribution Company of India, Limited;

(ii) Messrs. Standard Vaccuum Oil Company, Limited;

and

23rd September 1961]

(iii) Messrs. Caltex (India), Limited.

They enjoy almost an equal share of the total business of the Madras Branch of the Madras State Transport Department. The entire supply to the Kanyakumari Branch of the Department is by Burmah Shell. All the oil companies are supplying the Department at the rate contract concluded with the Director General, Supplies and Disposals.

SRI N. K. PALANISAMI : Sir, when other States have been importing Russian Oil as it is cheaper and superior, may I know why our Government are not importing it at least for the Transport Department?

THE HON. SRI V. RAMAIAH : The Indian Oil Co., who are distributing Russian oil are not in a position to supply the same to us as their storage facilities are limited now.

SRI M. KALYANASUNDARAM : இந்தியன் ஆயில் கம்பெனி என்பது நமது மத்திய அரசாங்கத்தால் நிறுவப்பட்டிருக்கும் ஒரு கம்பெனி. அவர்கள் சென்னையிலேயே எண்ணெ வைத்துக்கொள்ள இடம் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டார்களா ? அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : கேட்டதாக என்னிடம் தகவல் இல்லை, தனிக் கேள்வி போட்டால் சொல்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : மூன்று அந்நிய கம்பெனிகளை எப்படி டிஸ்ட்ரிப்யூட்டர்ஸாகக் கருதி அவர்களுக்கு சமமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதேபோல் இந்த இந்தியன் ஆயில் கம்பெனியையும் ஒரு டிஸ்ட்ரிப்யூட்டராகக் கருதி அவர்களிடமும் எண்ணெ வாங்க என்ன தயக்கம் ?

THE HON. SRI V. RAMAIAH : தயக்கம் எதுவுமே கிடையாது.

SRI N. K. PALANISAMI : The Hon. Minister was telling on the floor of the House that they had asked for facilities to store oil and the Government were considering the question of providing sufficient facilities, but now the Hon. Minister says that he has not received any communication from the Company. May I know the reason for this contradictory statement?

THE HON. SRI V. RAMAIAH : The hon. Member is a little bit confused. Just now, I have only stated that I have no information with me now.

SRI M. KALYANASUNDARAM : இந்த மூன்று அந்நியக் கம்பெனிகளோடு செய்துகொண்டிருக்கக்கூடிய ஒப்பந்தம் எப்பொழுது முடிவாகிறது ? அது முடியும் சமயத்தில் இந்தியன் ஆயில் கம்பெனியிலிருந்தும் வாங்கும் யோசனை பரிசீலிக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : இந்தியன் ஆயில் கம்பெனியிலிருந்து வாங்கும் யோசனை தொடர்ந்து பரிசீலனையில் இருந்துகொண்டு தான் இருக்கிறது. அவர்கள் நமக்கு கொடுக்கக் கூடிய சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்பதுதான் என்னிடமுள்ள தகவல்.

DEPUTY SPEAKER : Next quesetion.

SRI A. A. RASHEED : rose. . . .

[23rd September 1961

DEPUTY SPEAKER : Is it as a matter of right that the hon. Member wants to put a supplementary on the previous question?

SRI M. KALYANASUNDARAM : He is only making a request, Sir.

DEPUTY SPEAKER : That is all right. But, we have a number of questions in the list and the time at our disposal is very short. So, there will be no time for putting supplementaries on all questions. If it is an important question, I would have myself allowed supplementaries. This only relates to luxury coaches and I remember sometime back, supplementaries had been allowed on a similar question.

Buses—Luxury coaches

* 1748 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to run additional luxury buses in the City of Madras for the convenience of tourists?

THE HON. SRI V. RAMAIAH : A scheme to run a sight-seeing luxury coach to take tourists around the city of Madras is under the consideration of the Government.

Tools and implements—Supply on loan basis

* 1749 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுகா கீலையம்பட்டி, கொல்லு தச்சு தொழிலாளர்கள் தொழில் கருவிகள் கடன் வாங்க கோரி 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் தேதியில் ஜில்லா கலெக்டரிடம் கொடுத்த மனு மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There were 22 signatories to the petition in question out of whom 12 artisans were found to have applied for State Aid already. Out of the 12 applications, 6 were granted loans and the remaining 6 applications were rejected. The rest of the signatories to the petition were instructed to send their loan applications separately.

Prohibition propaganda vans (North Arcot district)

* 1750 Q.—SRI S. M. ANNAMALI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேளிள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் எத்தனை மதுவிலக்கு பிரசார வான்கள் உள்ளன ?

(இ) இதை அதிகரிக்கவேண்டுமென்று மாவட்ட மதுவிலக்கு கமிட்டியாரிடமிருந்து கோரிக்கை வந்ததா ?

(உ) அப்படியானால் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Only one, Sir.

(*b*) No, Sir.

(*c*) Does not arise.

23rd September 1961]

* **SRI S. M. ANNAMALAI** : சென்னை, செங்கற்பட்டு, வட ஆற்காடு இம்மூன்று மாவட்டங்களுக்கும் சேர்ந்து ஒரு பிரசார வான் தான் இருக்கிறது. ஆகவே அது நல்லமுறையில் பயன்படுத்தப்படவில்லை. ஆகவே அதை அதிகரிக்கவேண்டுமென்று டிஸ்ட்ரிக்ட் ப்ரொஹிபிஷன் கமிட்டிக் கூட்டத்திலிருந்து ரெஸல்யூஷன் அனுப்பியுள்ளார்கள், ஆகவே இதைக் கவனித்து, உடனடியாக ஒரு வான் அனுப்ப முயற்சி எடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனது அபிப்பிராயம் இனி பிரசாரத்திற்கு அவசியமில்லை என்பது. மதுவிலக்கு அமுலுக்கு வந்து ரொம்ப நாளாகிவிட்டது. அதை அமுல் படுத்தவேண்டும் அதற்கு பொது மக்களின் ஆதரவை பெறவேண்டும். தவிர, பிரசாரம் வேண்டியதில்லை என்பதுதான் என் அபிப்பிராயம்.

Prohibition Offences

* 1751 Q.—**SRI S. M. ANNAMALAI** : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் அதிகமாக மதுவிலக்குச் சட்டத்தை மீறிய குற்றங்கள் இல்லாத கிராமங்களுக்கு பரிசுகள் வழங்க எத்தனை கிராமங்களை சிபார்சு செய்யப்பட்டது ?

(இ) அதன்மீது சர்க்கார் எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No recommendation has been received by the Government for the award of prizes to villages in North Arcot District for minimum number of offences against the Prohibition Act.

(ஆ) Does not arise.

Lignite and iron ore—Despatch to Germany for testing

* 1752 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) when the required quantity of lignite is expected to be despatched to Germany for conducting the test; and

(*b*) whether the despatch of iron ore from Salem has been completed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Government have already taken on hand the collection, packing and despatch of the lignite required for the tests. Its shipment to East Germany is expected to be completed by the next month.

(*b*) The despatch of iron ore from Salem for the tests at the National Metallurgical Laboratory has been completed. The despatch of ore for tests abroad is expected to be completed next month.

SRI M. KALYANASUNDARAM : லிக்னைட், இரும்புக்கனி அனுப்பப்பட்டு பரீட்சை முடிந்து ரிபோர்ட்கள் கிடைக்க எவ்வளவு காலமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எவ்வளவு காலமாகும் என்று நிர்ணயித்துச் சொல்வதற்கில்லை.

[23rd September 1961

The Technical Committee has also recommended Pilot Plant tests involving Salem ore and Neyveli lignite at the low shaft furnace set up in the National Metallurgical Laboratory, Jamshedpur. For this purpose, the Director of the National Metallurgical Laboratory wanted 2,000 tons of iron ore and 2,000 tons of lime-stone from Salem. These quantities of raw materials have been sent to the National Metallurgical Laboratory and the tests are expected to commence soon. The Director, National Metallurgical Laboratory, Jamshedpur has indicated that these tests would be carried out with non-coking coal in the absence of lignite.

ஆக, இதை சீக்கிரத்தில் செய்வதற்குத்தான் இம்மாதிரி ஏற்பாடு.

SRI M. KALYANASUNDARAM : ஜம்ஷெட்பூரில் நடக்கும் பரீட்சையின் நோக்கம் வேறு. கிழக்கு ஜெர்மனிக்கு லிக்னைட், இரும்புக்கனி, இரண்டையும் சேர்த்து அனுப்புவது எந்தமாதிரி அமைப்பில் இயந்திரங்கள் அமைப்பது என்பதுபற்றி பரிசீலனை செய்யும் என்று சொல்லப்படுகிறது. மற்ற எந்த நாடுகளுக்கு இயந்திரங்கள் தயார் செய்ய பரீட்சார்த்தமாக நடத்த அனுப்பப்பட்டிருக்கிறது.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கும் இப்பொழுது ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

Iron allotment of

***1753 Q.—SRI V. K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் தனிப்பட்ட தொழிலதிபர்களுக்கு ஒதுக்கிய இரும்பு எவ்வளவு ?

(இ) கிண்டி தொழிற்பேட்டையிலுள்ள தனிப்பட்ட முதலாளிகளுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) 12,335 tons.

(*b*) 1,858 tons.

SRI V. K. KOTHANDARAMAN : சர்க்கார் நடத்தக் கூடிய தொழிற்சாலைகள், மற்ற கட்டிட வேலைகள் போன்ற சர்க்கார் உபயோகத்திற்கு தேவையான அளவிற்கு ஒதுக்கிவிட்டு அதற்குமேல் இதுபோன்று தனியார்களுக்கு ஒதுக்கப்படுகிறதா அல்லது தனியார்களுக்கு ஒதுக்கியதற்குப் பிறகு அவர்களிடத்தில் வாங்கப்படுகிறதா ?

THE HON. SRI V. RAMAIAH : This supplementary does not arise from the main question.

SRI K. ANBAZHAGAN : தமிழ் நாட்டில் மிக முக்கியமான ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையாகயிருக்கிற நாகை தொழிற்சாலைக்கு "அயர்ன் பில்லட்ஸ்" கிடைக்கவில்லை என்ற குறை பத்திரிகைகளில் வந்தது. (ரீ ரோலிங் மில்ஸ்). அது ஏற்படுவது ஒருவேளை நமக்கு கிடைக்கவேண்டிய இரும்பின் அளவு குறைவாக இருப்பதாலா ? அல்லது போக்குவரத்து தடை காரணமாகவா ? இதை நிவர்த்திக்க என்ன வழி வகை காணப்படுகிறது.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I require notice of a separate question.

23rd September 1961]

Malabar Police—Deputation to Nagaland

***1754 Q—Sri S. M. ANNAMALAI** : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்திலிருந்து நாகா கலகக்காரர்களை அடக்க போலிஸார் அனுப்பப்பட்டனரா ?

(இ) அப்படியானுல் அதற்கான செலவை யார் ஏற்றுக்கொள்கிருர்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Malabar Special Police was deputed to the Nagaland to perform guard and other duties.

(*b*) The expenditure was initially borne by this Government. The expenditure incurred up to 30th November 1957 has been recovered from the Assam Government. As the Administration of the Nagaland was taken over by Government of India with effect from 1st December 1957 the expenditure incurred from that date, is recovered from the Government of India.

9 a.m.

The Madras Beedi Industrial Premises (Regulation of conditions of work) Act

***1755 Q—Sri V. K. KOTHANDARAMAN:** கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பீடி தொழிற்சாலை சட்டத்தில் 2 (g) பிரிவுக்குத் தகுந்த திருத்தங்கள் எப்போது கொண்டுவர சர்க்கார் உத்தேசித்துள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The matter is under consideration.

DEPUTY SPEAKER : Question No. 1756.

SRI V. K. KOTHANDARAMAN : Rose.

DEPUTY SPEAKER : The Hon. Minister has given the answer that the matter is under consideration. What supplementary question the hon. Member is going to put after that?

SRI V. K. KOTHANDARAMAN and Sri N. K. PALANISAMI : rose.

DEPUTY SPEAKER : I want hon. Members to maintain discipline in the House.

SRI N. K. PALANISAMI : For important questions, I request the Chair to allow supplementary questions.

DEPUTY SPEAKER : For important questions I will certainly allow supplementary questions.

SRI M. KALYANASUNDARAM : At least one supplementary question should be allowed for each main question.

DEPUTY SPEAKER : Now, the hon. Member, Sri N. K. Palanisami can put his supplementary question.

[23rd September 1961

SRI N. K. PALANISAMI : The notification *re*. fixation of minimum wages for ginning workers has already been published in the Gazette. But so far it has not been implemented.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் விடையளித்தது பீடித் தொழிலாளர்களைப்பற்றியது.

DEPUTY SPEAKER : Evidently the hon. Member wanted to put supplementary question on Question No. 1756.

SRI V. K. KOTHANDARAMAN : இந்தச் சட்டத்திற்கு ஜீவநாடியாக இருப்பதே 2-ஜி. என்கிற பிரிவு தான். இதை அமல் நடத்தவேண்டும் என்று கேட்கும்போதெல்லாம் " **It is under consideration** " என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள் இரண்டு வருட காலமாக. அதோடு மற்ற பிரிவுகளை எல்லாம் மாற்றி பலவிதத்தில் விதிவிலக்கு கொடுத்து நோட்டிஃபிகேஷன் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதில் முக்கியமாக இருக்கின்ற 2-ஜி. என்பதற்கு நொட்டிஃபிக்கேஷன் வெளியிட இன்னும் எவ்வளவு காலமாகும் என்பதை திட்டவட்டமாக அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தச் சட்டத்தில் இருக்கின்ற 2-ஜி. என்பது அரசியல் அமைப்புக்கு விரோதமாக இருக்கிறது என்று கோர்ட்டார் தீர்ப்பு கூறியிருக்கிறார்கள். அதை சமாளிப்பதற்கு வேறு நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். அவசரப்பட்டு நோட்டிஃபிக்கேஷன் கொண்டுவந்தால் இன்னொரு கோர்ட் இம்மாதிரி ஏதாவது தீர்ப்பை அளிக்கக்கூடும். ஆகவே இதையெல்லாம் பரிசீலனை செய்துதான் இதன் பேரில் முடிவு எடுக்க வேண்டும். லேபர் கமிஷனர் அவர்களும் லாடி பார்ட்மெண்டும் இதைப்பற்றி பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

Ginning Factory Workers minimum wages

*1756 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether the ginning factory workers' representatives have submitted a memorandum on 10th March 1961 to implement the fixation of minimum wages?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : A petition, dated 9th January 1961 was received from the President, Coimbatore District General Workers' Union, Tiruppur, requesting that the minimum wages fixed for ginning workers might be enforced. But no complaints about non-payment of minimum wages have so far been received.

SRI N. K. PALANISAMI : Sir, I think the complaint is that the minimum wage has not been implemented so far. So, will the Government take steps to implement it?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that Inspectors have reported that they are keeping a watch and will take suitable action against defaulters if they do not comply with the provisions of the Act but no complaint regarding non-compliance has been received from the workers or their unions.

SRI N. MARUDACHALAM : ஜின்னிங் தொர்ழிலாளர்களை சீசன் தொழிலாளர்கள் என்று சொல்லி பாக்டரி முதலாளிகள் சர்க்காரை எமாற்றி வருகிறார்கள். உண்மையில் இந்தத் தொழில்ளர்கள் வருஷம் பூராவும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி

23rd September 1961]

இருக்கின்றவர்களை சீசன் தொழிலாளர்கள் என்று வேலையிலிருந்து நீக்கிவிட்டு புதிதாக தொழிலாளர்களை எடுக்கிறார்கள். ஆகவே இவ்வாறு வருடம் பூராவும் வேலை செய்கின்ற தொழிலாளர்களை நிரந்தரமாக்கி அவர்களுக்கு சட்டப்படியுள்ள கூலியை நிர்ணயம் செய்ய உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது வேறு பிரச்னை, இதற்கு தனியாக கேள்வி போட வேண்டும்.

Factories—Proto—type

*1757 Q—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நம் மாநிலத்தில் புரோடோடைப் தொழிற்சாலை ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானால், எங்கெங்கே ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) A proposal is reported to be under consideration of the Government of India.

SRI S. M. ANNAMALAI : இது தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுமா, அல்லது பொதுத் துறையில் ஆரம்பிக்கப்படுமா ? பொதுத் துறையில் என்றால், இதற்கு எவ்வளவு ரூபாய் செலவாகும், இதில் ஏற்படும் செலவை மத்திய சர்க்கார் ஏதேனும் ஏற்றிருக்கிறார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM ; இது பொதுத் துறையில் ஆரம்பிக்கப்படும். பிரஞ்சு அரசாங்கத்தின் ஒத்துழைப்போடு இது நிறைவேற்றப்படும்.

Power-looms

* 1758 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether power-looms are to be licensed in the State;

(b) if so, how many are to be permitted during 1961–62; and

(c) whether the Government have examined how far the introduction of power-looms would affect the hand-loom industry?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) It is proposed to introduce 2,500 power-loom in weavers' co-operative societies during the Third Five-Year Plan period. The number of power-looms to be installed during 1961–62 has not yet been decided; and

(c) Yes, Sir.

SRI M. KALYANASUNDARAM : கனம் அமைச்சர் அவர்கள் மூன்றாவது உப கேள்விக்கு சொன்ன பதிலில் ஆம் என்று சொன்னார்கள். இந்த விசைத்தறிகளை நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாக அனுமதிப்பதினால் ஏற்கனவே இருக்கக் கூடிய கைத்தறிகளுக்கு பாதகம் ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உணருகிறார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : இது ஒரு நீண்டகால பிரச்னை. இதைப்பற்றி ராஜ்யத்திலுள்ள எல்லா ஸ்தாபனங்களிடமும் கலந்து ஆலோசித்து பரிசீலனை செய்து, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 2,500 விசைத்தறிகளுக்கு அனுமதி கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

[23rd September 1961

SRI A. MARIAPPAN : தமிழ் நாட்டில் பல கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் விசைத்தறிகள் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பத் திருக்கிறார்களே அவர்களுக்கு அவை எப்போது கொடுக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : விசைத்தறிகள் தரவேண்டும் என்று இதைப்பற்றி முடிவு செய்கின்ற நேரத்தில் கூட்டுறவு சங்கங்கள் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டன. அதன்படிதான் இவ்விதம் 2,500 விசைத் தறிகள் ஆரம்பிப்பதற்கு அனுமதி வழங்குவது என்று தீர்மானிக்கப் பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் திட்டமிட்டபடி எல்லா உதவிகளையும் சர்க்கார் செய்து கொடுக்கும்.

SRI M. KALYANASUNDARAM ; விசைத்தறிகள் வேண்டும் என்று கேட்ட கூட்டுறவு சங்கங்களைவிட இதை அனுமதிக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்ட கூட்டுறவு சங்கங்கள் அதிகம் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

THE HON. SRI V. RAMAIAH : அத்தகைய தகவல் என்னிடமில்லை.

SRI K. R. NALLASIVAM : இத்தகைய விசைத்தறிகள் நடத்த தனிப்பட்ட நபர்களுக்கும் அனுமதி வழங்கப்படுமா ? அல்லது கூட்டுறவு சங் கங்களுக்குத்தான் வழங்கப்படுமா ? கூட்டுறவு சங்கங்களுக்குத்தான் என்றால் பத்து பேர் சேர்ந்து ஒரு கூட்டுறவு சங்கம் அமைத்து இதற்கு அனுமதி வேண்டும் என்று கேட்டால் அதற்கும் அனுமதி கொடுக்கப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : நான் கொடுத்த பதிலில் சொஸைட்டி களுக்குத்தான் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

SRI N. R. THIAGARAJAN : தலைவர் அவர்களே, கைத்தறி தொழி லாளர்களுக்கு விசைத்தறிகளால் ஏற்படும் பாதகத்தைக் காட்டிலும், கைத் தறித்துணிகளையே கட்டாமல், பக்கிங்காம் அண்டு கர்நாடிக் மில் துணிகளை உடுத்திக்கொண்டு கைத்தறித் தொழிலாளர்களுக்குக்காக கண்ணீர் விடும் சிலரால் அதிகமாக பாதகம் ஏற்படுகிறது என்பதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்ததா ?

(பதில் இல்லை).

SRI K. VINAYAKAM : Sir, in the interest of the handloom industry in our State, was it not the policy of the Government to safeguard it by not resorting to power-looms in our State. What are the extraneous reasons that now weighed with the Government for having given a go-by to this policy and then trying to introduce power-looms in our State?

THE HON. SRI V. RAMAIAH : There are no extraneous reasons as such. When we took decision early in 1956 not to have power-looms in our State, we did it on account of agitation or representations from the handloom weavers as such. But after experience and also after working one or two pilot schemes and also after studying the conditions prevailing in our neighbouring States and in our country, and also after the decision of the Government of India to push ahead with the power-looms, we found that if we did not agree to go in for power-looms, we would be put to a great loss.

23rd September 1961]

Legal assistance to the poor

*1759 *Q*—SRI S. M. ANNAMALAI:
SRI T. T. DANIEL:
SRI M. P. SARATHY: } கனம் உள்துறை அமைச்சர்
தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஏழைகளுக்கு சட்ட உதவி செய்வதைக் குறித்து மத்திய சர்க்கார் மாநில சர்க்காரின் ஆலோசனையைக் கேட்டார்களா ?

(இ) அப்படியானால், மாநில சர்க்காரின் பதிலென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The Government of India enquired whether the State Government have formulated any Scheme for "Legal aid to the poor".

(இ) The question of formulating a Scheme for "Legal aid to the poor" by the State Government is under consideration and no reply has yet been given to the Government of India.

SRI S. M. ANNAMALAI : ஸார், சாதாரணமாக ஏழைகளுக்கு சட்ட உதவி கிடைக்காமல் அவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே இதை சர்க்கார் உடனடியாக கவனித்து—மத்திய அரசாங்கம் கூட ஸ்டாம்பு விற்பனையில் ஒரு பகுதியை இதற்காக எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கிறது—ஆகவே அதை உபயோகித்தாவது ஏழைகளுக்கு உதவி கொடுக்க சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த சட்டமன்றத்தின் ஆயுள் காலத்தில் இதற்கான முடிவைக் கொண்டு வந்து விடலாம் என்று எதிர்ப்பார்ப்பதற்கில்லை. பொதுத்தேர்தல் வந்து புது அரசாங்கம் வந்த பிறகு தான் இந்த முடிவை செயல்படுத்த முடியும் என்று நினைக்கிறேன்.

SRI T. T. DANIEL : May I know whether at present any legal aid is given to the poor people, to any type of civil cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think so.

SRI M. KALYANASUNDARAM : ஸார், அரசாங்கத்தினுடைய ஆலோசனையிலிருந்து வரும் திட்டங்கள் எவையெல்லாம் என்பதை அறிவிக்க முடியுமா ? இவைகள் எல்லாம் சட்டசபை முன்பு வந்துதான் நிறைவேற்றப்படவேண்டும் என்ற அவசியமிருக்கிறதா ? நிர்வாக உத்திரவுகள் மூலமாக இவைகளை நிறைவேற்ற முடியாதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுவும் பரிசீலனை செய்ய வேண்டிய விஷயம். இதில் எந்த விதமாக முடிவு எடுக்க வேண்டும் என்று இன்னும் தீர்மானிக்கவில்லை. ஆகவே இப்போது என்ன யோசனைகள் இருக்கின்றன என்று சொல்லுவதற்கில்லை. பல சிக்கல்கள் வருகின்றன. அவைகளை எல்லாம் பரிசீலனை செய்ய வேண்டும். அதோடு இதற்காக எவ்வளவு செலவாகும் என்பதைப் பற்றியும் கவனிக்க வேண்டியிருக்கிறது.

SRI R. SRINIVASA IYER : What is the standard of poverty to enable a person to be entitled to free legal aid? Are the Government aware that almost all the legal practitioners conduct the cases entrusted to them whether fees are received by them or not and even if there are arrears in payment of pleader's fees? Not one suit has been filed so far against the non-payment of pleader's fees.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : If that is so I should express my appreciation to the lawyers.

[23rd September 1961

Limestone deposits—Salem district

* 1760 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether a comprehensive survey of limestone deposits was made at Salem to assess the quantity available for iron and other industries;

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A survey of the limestone deposits is being conducted by the State Geological Department in Sankaridrug and Tiruchengode areas of Salem district in connection with the proposed Neyveli-Salem Steel Project. The investigation is likely to be completed in a few month's time.

SRI N. K. PALANISAMI : May I know the details of the findings of the survey?

THE HON. SRI V. RAMAIAH : It is still going on.

Industries—Investments by Life Insurance Corporation

* 1761 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have requested the Life Insurance Corporation of India to invest more capital on Industries in the State; and

(*b*) if so, the reply received from them?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware of the criticism that is levelled that the Life Insurance Corporation is not investing more capital in this State when compared to other States and if so, will this Government approach the Life Insurance Corporation to invest more capital in our State for the development of industries in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that this Government have no jurisdiction over the Life Insurance Corporation.

SRI K. ANBAZHAGAN : இந்த ஆயுள் பாதுகாப்பு நிதியிலிருந்து ஒவ்வொரு மாநிலத்திற்கும் தொழில்களுக்காக அளிக்கப்பட்டிருக்கும் உதவித் தொகை எந்த வீதாசாரத்தில் இருக்கிறது என்று பார்க்கும் போது சென்னைக்கு அளிக்கப்பட்டிருக்கிற உதவித் தொகை குறைவாக இருக்கிற காரணத்தினுல் இதை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்க வாவது இந்த சர்க்கார் முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த அரசாங்கம் கேட்டுக்கொள்வதைவிட பாராளுமன்றத்தில் இருக்கிற நம்முடைய பிரதி நிதிகள் அங்கே இதை எழுப்பலாம், மத்திய சர்க்காரிடம் இதை எடுத்துச் சொல்லலாம்.

23rd September 1961]

Scientific detection of crimes

* 1762 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விஞ்ஞான முறையில் குற்றங்களைக் கண்டுபிடிக்க எந்தெந்த மாவட்டங் களில் பரீக்ஷார்த்த முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Government have sanctioned the establishment of a full-fledged Forensic Science Laboratory for the State of Madras with effect from 1st December 1959 by the integration of the following Departments or Units :—

1. The Chemical Examiner's Department;

2. The Laboratory attached to the C.I.D. doing documents, ballistics, coin and currency work;

3. The Laboratory attached to the Board of Revenue (Commercial Taxes) Excise Wing, Madras.

There is the Finger Print Bureau at Vellore which aids investigating officers in tracing antecedents of suspected persons if their finger print slips are already on record and also establish identity or otherwise of chance impressions and disputed impressions on documents after a comparison with those of known persons.

Another Branch of the work is the Single Digit System of Finger Print which has been introduced in the Madras City in 1956 and in Madurai with effect from 1960.

SRI K. VINAYAKAM : Whereas in the matter of detection of crimes, Scotland Yard Police are world famous, are any opportunities given for our State Police Officers to study those methods by visiting the offices of Scotland Yard and thus improve our system of detection of crimes?

THE HON SRI M. BHAKTAVATSALAM : Yes, some of our officers have had the opportunity of visiting Scotland Yard and studying their methods.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், இரண்டு நாட்களுக்கு முன்னால் கனம் அமைச்சர் சொன்னார், விஞ்ஞான முறையிலே அடிக் காமல், மிரட்டாமல் வீதியிலே கொண்டு போகிறோம் என்று சொன்ன வுடனே குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்று சொன்னார்கள். அந்த முறையில் பதுக்கல்காரர்கள், கலப்படம் செய்கிறவர்கள், கள்ள மார்க் கெட் செய்கிறவர்கள் இவர்களை உள்ளே தள்ளாமல், அபராதம் போடாமல் ஊர்வலமாக கொண்டு போகக் கூடிய அளவுக்கு ஒரு திட்டத்தை வகுத் தால் இதையெல்லாம் அடக்க முடியும் என்று நினைக்கிறேன். இதை யெல்லாம் செய்ய முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : போலீஸார் இதை யெல்லாம் கவனித்து யார் யாரை எப்படி நடத்த வேண்டுமோ அப்படி நடத்தி வருகிறார்கள்.

SRI S. RANGANATHA MUDALIAR : Does not the use of Police dogs come under scientific detection of crimes?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, that is one method of detection of crimes.

[23rd September 1961

Steel-rolling mills

* 1763 Q.—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the attention of the Government has been drawn to the resolution, passed at the All-India Manufacturers' Organization, which met in Coimbatore on 8th July 1961, that steel rolling mills should be established in Coimbatore, Thanjavur, Tirunelveli, Madurai and Salem; and

(b) if so, the action taken on this resolution?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes Sir.

(b) The Government are taking steps to set up a steel rolling mill with an annual capacity of 20,000 tons in the State in the Public Sector.

The Government have also recommended a number of applications for licences under the Industries (Development and Regulation) Act, 1951, to set up steel re-rolling mills in the Private Sector in various parts of this State. The decision of the Government of India on these applications is awaited.

SRI A. A. RASHEED : May I know where will these steel rolling mills be established in our State?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Private applications have been recommended to the Government of India and I do not think it is possible to give the names of applicants, the places they want the steel re-rolling mills to be established.

Handloom Weavers—Indebtedness of

* 1764 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) the details of schemes for relieving the handloom weavers of their indebtedness; and

(b) the number of weavers benefited by the scheme up to 30th June 1961?

THE HON. SRI V. RAMAIAH : (a) The details of the scheme has been furnished in the statement which was placed on the table of the House on 29th March 1961 in reply to Starred Question No. 1690 by the hon. Member.

(b) The scheme has been forwarded to the All-India Handloom Board for its technical approval. The Central Working Group for Handloom Industry has recommended the scheme. The recommendation has been accepted in principle by the Government of India. The Board has been addressed to expedite the technical approval. Action will be taken simultaneously to start implementing the scheme.

23rd September 1961]

Gunny bags

* 1765 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கோணிப்பைகள் செய்யும் தொழிற்சாலே ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(இ) அப்படியானல், பொதுத் துறையிலா, தனியார் துறையிலா ? எங்கே ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) No, Sir.

(இ) The question does not arise.

* 1766 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1959-60-ம் ஆண்டுகளில் எவ்வளவு கோணிப்பைகள் நம் மாநிலத்திற்கு வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : About 56·6 million gunny bags were imported into Madras from other States during 1959-60.

SRI S. M. ANNAMALAI : ஸார், சில நேரங்களில் கோணிப்பைகள் கிடைக்காமல் வியாபாரிகள் கஷ்டப்படுகிறார்களே. கோணிப்பைகள் பிற மாநிலங்களிலிருந்து வருவதற்கு தடை இருப்பதால்—வாகன் பற்றாக்குறை இருப்பதால்—விலைகள் மேலும் மேலும் ஏறிக்கொண்டுபோகிறதே. இதற்கு சர்க்கார் எடுத்துக் கொண்ட முயற்சிகள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதற்கு கோணிப்பைகள் நம் மாநிலத்தில் உற்பத்தி செய்வதென்றால் அது திருப்திகரமாக இருக்கும். ஆனல் அதற்கு ஜுட் வேண்டும். ஜுட் நம் மாநிலத்தில் உற்பத்தி ஆவதில்லே. ஆனல் வேறு மூலப் பொருள்—மெஸ்டா என்ற மூலப் பொருள்—இருந்தால் கோணிப்பைகள் உற்பத்தி செய்யலாம். மெஸ்டா நம் மாநிலத்தில் எங்கே விளையும் என்றும் பரிசீலனே செய்யப்பட்டு வருகிறது.

Wool, etc.—Export of

* 1767 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு ஜில்லாவில் தோல் பதனிடும் தொழிற்சாலேகளில் விழும் ஆடு மாடுகளின் முடிகள் எந்தெந்த ராஜ்யங்களுக்கு அல்லது வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன ?

(இ) 1957 முதல் 1959 வரை எவ்வளவு, எங்கெங்கே ஏற்றுமதி செய்யப்பட்டது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement [a] furnishing the particulars is laid on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : மேஜை பேரில் வைக்கப்பட்டிருக்கக் கூடிய ஸ்டேட்மெண்டிலே எல்லா வெளி நாடுகளுக்கும்—வெஸ்ட் ஜெர்மனி, யுனேடெட் கிங்டம் போன்ற நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் மற்ற ராஜ்யங்களுக்கும்—ஏற்றுமதி செய்யப்படுவதாகத் தெரிகிறது. நம் ராஜ்யத்தில் இப்போது நம் ராஜ்யம் ; மைசூர் ராஜ்யம், மத்திய சர்க்கார

[a] Printed as Appendix II on page 593 infra.

[23rd September 1961

ஆகிய மூன்று பேர்களும் சேர்ந்து ஆரம்பித்திருக்கிற கம்பளித் தொழிற் சாலேயின் கதி என்ன ஆவது ? ஆகையால் இதை ஏற்றுமதி செய்யாமல் இங்கேயே உபயோகப்படுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஓரளவு இந்தப் பொருள் —ஏன் ? எந்தப் பொருளுமே—ஏற்றுமதி செய்வதில் நாம் அக்கரை உடையவர்களாக இருக்க வேண்டும். இப்படி ஏற்றுமதி செய்யப்படுவதால் இங்கே நடத்தப்படக் கூடிய தொழில்கள் பாதிக்கப்பட மாட்டாது.

Tanneries

* 1768 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is a proposal to declare tanneries as public utility ; and

(*b*) if so, when?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Clauses (*a*) and (*b*). Yes, Sir. The matter is under consideration.

SRI A. A. RASHEED : May I know when this will be declared?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The Draft Bill is being prepared in the first place. As soon as it is ready, I think it will be brought before the House.

Tannery workers minimum wages

* 1769 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தோல் பதனிடும் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சக் கூலி நிர்ணயம் செய்ய போர்டு அமைக்க உத்தேசமுண்டா ?

So the Government amendment seems to indicate that there could also be a ceiling in respect of subsequent acquisitions, which exceeds the ceiling area fixed for the first time. That is why the amendment clearly says " But for the purpose of calculating the ceiling area of such family for the second or for any subsequent time ". I would say that it should be " for the second or for any subsequent time as stipulated under Clause 21 ". It is only under Clause 21 that the authorised officer gets a right to fix the ceiling for the subsequent acquisitions. When the ceiling is fixed on a subsequent date for such a family, the members who are contemplated to form a family are not the members who are members on the date of the notification under Clause 8. It clearly lays down that for the purpose of fixing that ceiling, the members who constitute the family must be the members of that family on the date of the draft statement. That is considered as the crucial date for deciding who are all members of that family. I therefore think that the first paragraph of the amendment is quite necessary so as to cover acquisitions subsequently made under Clause 21.

The meaning should be made so clear that there was no doubt. As pointed out by the hon. Member Sri Srinivasa Iyer, it does not refer to addition of members to the family caused by birth or

reduction in the number of members caused by death in the family. Sir, clause 21 is very cleverly worded. It contemplates only certain types of acquisitions by which the existing ceiling area fixed for a particular family under clause 10 for the first time is increased. Sir, I think in the Government amendment, the words ' under clause 21 ' should find a place.

Coming to clause (*b*), I think the Government have perhaps in mind that there can be families in respect of which for the first time acquisitions could not have been made soon after the publication of the Act. It may be possible for families after the commencement of this Act also to acquire excess of lands as contemplated under this Act. So, the words ' other family ' refer not to families other than Hindu families, but other families in respect of which the first ceiling or the second or subsequent ceiling has been fixed. They deal with only those families which were not having this ceiling and who were not affected under clause 10 on the date of commencement of the Act. Afterwards, they may acquire land which might exceed the ceiling area. So, the phrase ' any other family ' refers to those whose families have acquired land subsequent to the date of the commencement of the Act and in respect of whom the ceiling area has to be fixed. It does not refer, as pointed out by Sri Srinivasa Iyer, to families other than the Hindu families. It only refers to families which are not covered by the previous sub-clause.

Coming to the last paragraph, it is rather confusing and confounding according to me. Sub-clause (5) states—

" The draft statement shall be published and a copy thereof shall be served on the persons concerned, the tenants, creditors and all other persons who in the opinion of the authorized officer are interested in the land to which such draft statement relates, together with a notice stating that any objection to the draft statement shall be preferred within sixty days from the service of such notice. Any objection received within the time specified in the notice or within such further time not exceeding thirty days as the authorized officer may in his discretion allow shall be duly considered by the authorised officer who, after giving the objector a reasonable opportunity of being heard and of adducing evidence, if any, and subject to such rules as may be made shall pass such order as he deems fit.

According to this sub-clause, the objector has to file his objections within 60 days from the date of publication of the draft statement. There may be cases where the objector may not be aware of the publication of the draft statement at all. So, it would be better that the objector had the right to file his objection only within 30 days from the date of service of notice on him. Before the preparation of the draft statement, it is not incumbent on the part of the authorized officer to send notice to all persons concerned

in the proceedings. There may be several persons to whom notice could not have been sent and they may not be aware of the publication of the draft statement. They may not know where copies of the drfat statement can be had, and whether the draft statement will be sent to each person concerned in that proceeding. In the absence of any such procedure, it is only proper that the objector is given an opportunity to file his objection within a specified date from the date of service of notice on him. I think the amendment brought forward by the Government may be modified so far as the first portion is concerned to make it clear that it contemplates only such of those acquisitions of land which come under clause 21. I think the other part is quite all right, because it only deals with any other family which does not fall under clause (a).

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, two hon. Members who are lawyers have spoken on this amendment. It is rather funny that hon. Member Sri Srinivasa Iyer says that the first portion of the amendment to sub-clause (2) (a) and (b) is confusing and un-understandable. But, he says that sub-clause (5) is quite all right and he welcomes it. On the other hand, hon. Member Sri Daniel says that the amendments to sub-clause (2) (a) and (b) are all right and a provision like that should be made, but he says that the latter portion is confusing. Between these two ' confusions ', I have to explain what is the exact state of affairs is.

According to the original provision, account is taken of the state of the family on the notified date, but between the notified date and the subsequent date if any decrease in the number of the family had taken place, then there was no worry and no trouble. But, if there was an increase either by way of births, or if the family received larger extents of land by bequest or inheritance, we should see that the provision relating to the extra members getting five acres is not infringed. That is why, we have to put a date in between. Then only, we can have a check-up in the matter and see that a person in the family did not have more than five acres and thus infringe the provision relating to the same. If we do not make this provision, we will become powerless to deal with cases which have happened between these two dates. That is why provision has been made now to clarify these two sub-clauses.

As regards the other thing, the two hon. Members have expressed their respective views. But, we will have to consider what will happen to those people who are not in receipt of any notice. We must make a distinction between person on whom notice has been served and others who might not have received notice and whom notice might have been served and who at the same time might have some indirect interest. Now, we give them sufficient time, viz., 60 days from the date of publication of the draft statement. Provision for filing of objections within that

time is made. I think the position has been made sufficiently clear now. It is only to serve the purpose of the clause, these amendments have been moved by me.

The 36 Government amendments were put and carried.

The amendment of Sri V. K. Ramaswami Mudaliyar was put and lost.

Clause 10 as amended was put and carried.

Clauses 11 to 15 were put and carried.

Clause 16.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 16 do stand part of the Bill.'

SRI R. SRINIVASA IYER : Sir, I move the following amendment :—

'In sub-clause (1), (*b*), for the words "subject to the condition that the land so reverted together with the other land held by him does not exceed the ceiling area", substitute the words "and shall be taken into consideration by the authorised officer for preparing the draft statement under section 10 or the final statement under section 12".'

SRI K. VINAYAKAM : Sir, I second the amendment.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

* SRI R. SRINIVASA IYER : இந்த 16-வது கிளாஸ் "பொஸஸரி மார்ட்கேஜி" பற்றியது. ஒரு மனிதன் நிலத்தை சுவாதீன அடமானம் வைத்திருந்தால் சுவாதீன அடமானம் வைத்த நிலம் அடமானம் பெற்றவரிடம் இருப்பதா அல்லது சுவாந்தாரிடம் இருப்பதா என்பதைக் குறித்தது. இதில், 1-வது கிளாஸில் பொஸஸரி மார்ட்கேஜியின் சொத்து, அடமானம் பெற்றவர் கையில் இருக்கும் நிலம் உச்சவரம்பிற்கு அதிகப்படியாகயிருந்தால் அது சுவாதீன அடமானம் வைத்தவர் சுவாதீனத்திற்குப் போய்விடும். அப்பொழுது அவருக்கு அந்த உச்சவரம்பில் கணக்கிடப்படும். பின், சுவாதீன அடமானம் வைத்தவர் அடமானம் வைத்த நிலத்தை அது நல்ல நிலமானுல் அது தன் கையில் இருக்கவேண்டும், அதாவது உச்சவரம்பிற்கு உள்பட்டு இருக்க வேண்டுமென்று சொன்னுல் அப்படி வைக்கவேண்டியதுதான் நியாயம். ஆனுல் இப்பொழுது இருக்கக்கூடிய வாசகத்தில் அடியிற்கண்டவறு இருக்கிறது.

'In any case where the total holding of the possessory mortgagor is in excess of the ceiling area, and where he desires the land mortgaged by him or any part thereof to be included within his ceiling area in the return furnished by him under section 8, revert to him subject to the condition that the land so reverted together with the other land held by him does not exceed the ceiling area.'

முன் பாகத்தில் அடமானம் வைத்த ஓனர்-க்கு அந்த நிலம் தன் உச்சவரம்பிற்கு உட்பட்டு இருக்கவேண்டுமென்ற உரிமையை கொடுத்துவிட்டு பின்னுல் உச்சவரம்பிற்கு மேற்படாமல் இருக்கவேண்டுமென்ற கண்டிஷன்

மட்டும் போடப்பட்டிருக்கிறது. உச்ச வரம்பிற்கு மேற்படாமல் இருக்க வேண்டியது நியாயம். ஆனால் அந்த நிலம் அவரிடம் இருக்கும்படிச் செய்வதற்கு அவருக்குத்தான் உரிமை இருக்கவேண்டும். சுவாதீன அடமானம் வைத்திருந்தால் அந்த நிலம் நல்ல நிலமாகயிருந்தால்தான் அடமானத்திற்கு பணம் கொடுத்திருப்பார்கள். மற்றவை சாதாரணமாக யிருக்கலாம். நல்ல வருமானம் வரும் நிலம் தன் உச்சவரம்பின் லிமிட்டுக்கு உட்பட்டு இருக்கவேண்டுமென்று சுவாதீனம் வைத்தவர் சொல்வதற்கு உரிமை இருக்கவேண்டும் என்று இருக்கிறது. ஆனால்,

' subject to the condition that the land so reverted together with the other land held by him does not exceed the ceiling area.'

என்று மட்டும் போட்டு, அந்த நிலத்தை 30 ஸ்டாண்டர்டு எக்கருக்கு உட்பட்டு வைப்பதற்கும், வைக்காமல் இருப்பதற்கும் ஆதரைஸ்ட் ஆபிஸருக்கு அதிகாரம் போய்விடும். ஆகவேதான் நான்,

' shall be taken into consideration by the authorised officer for preparing the draft statement under section 10 or the final statement under section 12.'

என்று சொல்லியிருக்கிறேன். சுவாதீன அடமானம் வைத்தவர், அந்நிலம் நல்ல நிலமாக இருந்தால் தன் உச்சவரம்பு லிமிட்டுக்குள் அது வர வேண்டுமென்று சொல்வதை ஒப்புக்கொண்டு இதர நிலத்தை அதிகப்படியாக இருந்தால் நஷ்டஈடு கொடுத்து பிறருக்கு கொடுக்க இடம் இருக்க வேண்டுமென்றுதான் வாசகத்தை மாற்றி இருக்கிறேன். சர்க்காருக்கும், இந்த பில் தயாரித்தவர்களுக்கும், எனக்கும் அபிப்பிராயம் ஒன்றுதான். தான் வேண்டுமென்று கேட்கும் நிலம் அவரிடமே இருக்கலாமா அல்லது வேறு இடத்திற்கு மாற்றிவிடலாமா என்பது ஆதரைஸ்ட் ஆபீஸர் தீர்மானமாக இருக்க வேண்டாம். பின்னால் ஒரு செக்ஷனில், உச்சவரம்பிற்கு உட்பட்டு எந்த நிலம் தனக்கு இருக்கவேண்டுமென்று சொல்ல சுவாந்தாருக்கு உரிமை உண்டு என்று சொல்லி இருக்கிறோம். ஆகவே அதற்கும் இதற்கும் ஒற்றுமையிருக்கும் என்று நினைத்துத்தான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். இப்பொழுதுள்ளபடி, இருந்தால் நான் சொல்லக்கூடிய அபிப்பிராயம் வருமென்றால் சரி. இல்லாது, பின்னால் உள்ள உரிமையை பாதிக்கக்கூடியதாக இருக்கக் கூடாது.

' and shall be taken into consideration by the authorised officer for preparing the draft statement under section 10 or the final statement under section 12.'

என்று சொல்லியிருக்கிறேன். இதில் பாலிஸி மாறுதல் எதுவுமில்லை. ஆகவே, எனது திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் கிறேன்.

* THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I am made to understand that even without the necessity of an amendment like the one that has been moved by the hon. Member, what he wants can be carried out with the existing provision. In sub-clause (1) (*b*) it is stated—

' where he desires the land mortgaged by him or any part thereof to be included within his ceiling area in the return furnished by him under section 8, revert to him subject to the condition that the land so reverted together with the other land held by him does not exceed the ceiling area '.

So, within that orbit, he is entitled to get a reversion of it. What the hon. Member wants is that the words 'and shall be taken into consideration by the authorised officer for preparing the draft statement under section 10 or the final statement under section 12' should be substituted. Normally the authorised officer will take all this into account when he prepares the statement. So no specific mention need be made.

* SRI R. SRINIVASA IYER: Sir, I want to say only this thing. The meaning is the same and I do not disagree with that. But the wording 'subject to the condition that the land so reverted together with the other land held by him does not exceed the ceiling area' will mean that the reverted land will be in excess of the ceiling area. It will revert to him only on the condition that particular land which the owner or the possessory mortgagor possesses will not be in excess of the ceiling area. That will not enable the possessory mortgagor to say, 'this land shall be out of my ceiling limit'. Whatever the Authorised Officer may think, the right of the possessory mortgagee is supreme and that land will revert to him. 10-30 a.m.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: My submission is to make what Sri R. Srinivasa Iyer said more clear, that is that the Hon. Minister could give us an assurance that these things will be implemented in the rules at least.

THE HON. SRI M. A. MANICKAVELU: Even without reference to rules, I have made the meaning very clear. If it is still necessary to provide for these things in the rules, we can think of providing for that in the rules.

The amendment was by leave withdrawn.

Clause 16 was put and carried.

Clause 17.

DEPUTY SPEAKER: The question is:—

"That Clause 17 do stand part of the Bill".

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move the following amendment:

"In Clause 17—

(i) in sub-clause (2), add the following at the end, viz.,

"Out of such compensation, three-fourths shall be paid to the cultivating tenant and one-fourth to the intermediary, if any."

(ii) in sub-clause (3) omit the words "to the tenant".

The amendment was put and carried.

Clause 17 as amended was put and carried.

Clause 18.

DEPUTY SPEAKER: The question is:—

"That Clause 18 do stand part of the Bill"

SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Sir, I move the following amendment:

"In sub-clause (3) add at the end of the proviso the following:—

"If the owner had to maintain any machinery such as pump set till the harvesting of the crop, he shall be entitled to remove the machinery without liability for the penalty provided for in Section 88."

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER: The Clause and the amendment are before the House for discussion.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: My amendment is clear. I had appealed before the Select Committee that some time should be allowed for the removal of the machinery till harvesting, if there were standing crops and that has been conceded. If some machinery had to be maintained, till the harvesting of the crop, some more time should be allowed. There is no point in imposing a penalty provided for in section 88. I want the penalty provision to go. I do not think there will be any necessity at all for imposing a penalty. Nobody will allow the pump set to remain there after the harvesting of the crop. I do not want that the penalty clause should be there. That is my submission.

* THE HON. SRI M. A. MANICKAVELU: I do not know the exact meaning of the amendment. It says as follows: "If the owner had to maintain any machinery such as pumpset till the harvesting of the crop, he shall be entitled to remove the machinery". On the one hand he wants the machinery to be there till the harvesting of the crop. In the same sentence it is said that he should be entitled to remove the machinery. I am not able to understand the meaning of the amendment. If there is standing crop, time is allowed till harvesting of the crop. There is no difficulty. As far as machinery under sub-clause (3) is concerned, so far as agricultural machinery is concerned, they would be acquired by Government and would vest in the Government. Provision is made for payment of compensation for such machinery acquired.

SRI M. KALYANASUNDARAM: The amendment is a negation of the clause.

THE HON. SRI M. A. MANICKAVELU : So far as the machinery used for agricultural purposes is concerned, they will be there. Government will allow it till such time as harvesting is done. So far as non-agricultural machinery is concerned, there is no difficulty. So I do not think the amendment will serve any purpose.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : மாசூல் எடுத்தவுடன் மெஷினறிகளுக்கும் பாதுகாப்பு இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்காக இதில் ஒரு பீனல் கிளாஸ் இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இதில் திருத்தம் கொடுத்திருக்கிறேன்.

The amendment was put and lost.

Clause 18 was put and carried.

Clause 19 was put and carried.

Clause 20.

DEPUTY SPEAKER : The question is :—

"That Clause 20 do stand part of the Bill".

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Sir, I move the following amendment :

In sub-clause (1), *delete* the words "as a penalty for contravention of the provisions of section 7" and *for* the proviso (*c*), *substitute* the following :—

"(*c*) the transferee shall be eligible for compensation for the land in excess of the ceiling in accordance with the provisions in Schedule III or the proportionate value paid by him, whichever is less."

What I say is that the transferee should be paid compensation for the land in excess of the ceiling or the money paid by him. The transferee need not be penalised. If in a court auction, he buys the land for the money due to him, he should not be penalised.

The amendment was duly seconded.

THE HON. SRI M. A. MANICKAVELU : The penalty is for contravention of provisions of Section 7. If the extent of land held by a person (a transferee) is in excess of the ceiling area, then the right, title or interest accrued in his favour by virtue of such transfer, be deemed to have been transferred to Governmet. We must say why we take it? We can't simply take it. We say that he has contravened the provisions of Section 7 and as a penalty we take it. We say dogmatically that he should not exceed the ceiling area. He ought not to exceed the ceiling area. If he exceeds, as a penalty, we take it.

* SRI V. K. RAMASWAMY MUDALIYAR: Supposing a man has got lands up to ceiling. In addition he has lent money on a particular property. Supposing there is combination in the village and they don't allow the creditor to acquire the land. What is the alternative for the man who had lent the money? If he is driven to the painful necessity of taking the land in auction for the money due to him, he must be given some time to dispose of the land. He should not be penalised. That is all my contention.

THE HON. SRI M. A. MANICKAVELU: If we want to effectively carry out the land ceiling legislation, we must have a clause like this. Otherwise anybody who had lent money would try without fear or favour to take over land in Court-auction. There must be a preventive aspect and that is provided in this. Otherwise, we will be powerless to carry out the provisions of this Bill.

The amendment was put and lost.

Clause 20 was put and carried.

Clause 21.

DEPUTY SPEAKER: The question is—

"That Clause 21 do stand part of the Bill".

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move—

In Clause 21, in sub-clause (2)—

(i) for the words 'after the date', substitute the words 'on or after the date';

(ii) for the words 'date of the publication of this Act', substitute the words 'notified date'.

Sir, 'on or after the date' is the usual phraseology we adopt in such cases. Then we have said that instead of the date of publication of the Act, the notified date shall be substituted. That will be more appropriate with regard to the provisions of this clause.

SRI K. G. PALANISWAMY GOUNDER: Sir, I move the following amendment:—

After sub-clause (3), add the following as sub-clause (4):—

(4) The provisions of this section shall not however affect any sale or alienation of such land or part thereof as may be liable to be declared as surplus land if such sale or alienation is effected within two years from the date of the acquisition."

The amendment was duly seconded.

SRI K.G PALANISWAMY GOUNDER கனம் தலைவர் அவர்களே, ன் குறிப்பிட்டிருக்கிற இந்தத் தேதி வேண்டாமென்றும் அதை மாற்றி யமைக்கவேண்டுமென்றும் சொல்லி அந்தத் திருத்தத்தை ஆதரிக்கிறேன்

23rd September 1961]

*SRI R. SRINIVASA IYER : ஸார், இப்போது சர்க்கார் கொடுத்திருக்கின்ற இரண்டு திருத்தங்களும் தேதியைக் குறித்தவை. "ஆஃப்டர் தி டேட்" என்று சொன்னால் ஒரு குறிப்பிட்ட தேதி எடுபட்டு போய்விடும். பிறகு என்று இல்லாமல் அந்தத் தேதியில் ஏற்பட்டாலும் அது பாதிக்கப்பட வேண்டும் என்று திருத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு திருத்தம் "நோட்டிஃபைட் டேட்" என்று "டேட் ஆஃப் பப்ளிகேஷன் ஆஃப் திஸ் ஆக்ட்" என்பதற்கு பதில் போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். செக்ஷன் 8-ல் "நோட்டிஃபைட் டேட்" என்று இருக்கிறது. இது பின்னால் இருக்கக்கூடிய தேதியாகத்தான் வரும். ஆகையால் இந்த இரண்டு திருத்தங்களையும் நான் ஆதரிக்கிறேன்.

கனம் அங்கத்தினர் பழனிசாமி கவுண்டர் அவர்களுடைய திருத்தத்தைப் பொறுத்த வரையில் அவருடைய அபிப்பிராயம் உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்ட பிறகு, இரண்டு வருஷத்திற்குள்ளாக, உச்ச வரம்புக்கு அதிகப்படியாக இருக்கக்கூடிய நிலத்தை விற்றுக்கொள்வதற்கு லாண்ட் ஓனருக்கு உரிமை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இதைப்பற்றி பின்னால் காம்பென்சேஷன் பற்றி வரும் இடத்தில் நான் ஒரு திருத்தமும் கொடுத்திருக்கிறேன். வேறு சில மாநிலங்களில் எக்ஸெஸ் ஆஃப் ஸீலிங் ஏரியாவாக இருக்கக்கூடியதை எந்தக் குடியானவன் சாகுபடி செய்கிறானோ அவனிடமே விற்றுவிட அந்த ஓனருக்கு அனுமதி தரவேண்டும். அதற்கு ஆதரைஸ்ட் ஆஃபீஸர் விலையைக்கூட நிர்ணயிக்கலாம் என்று இருக்கிறது. இன்னும் ஒரு மாநிலத்தில் இரண்டு வருஷ டைம் கொடுத்து அவர் நியாயமான முறையில் விற்றுவிட்டால்—நிலம் இல்லாதவர்களுக்கு விற்றுவிட்டால்—சர்க்கார் கொடுக்க வேண்டிய காம்பென்சேஷன் கொடுபடாமல் இருக்குமே என்ற நோக்கத்தில் இரண்டு வருஷ டைம் கொடுத்திருக்கிறார்கள். இவர் சொல்லியிருப்பது "ஸச் ஸேல் ஆர் ஏலியனேஷன் இஸ் எஃபெக்டெட் வித்தின் டூ இயர்ஸ் ஃப்ரம் தி டேட் ஆஃப் தி அக்விஸிஷன்" என்பது. நோட்டிஃபைட் டேட்டிலிருந்து அக்விஸிஷன் ஆனது போல் ஆகிவிடும். ஆனால் இரண்டு வருஷங்களுக்கு விற்க உரிமை கொடுக்க வேண்டுமென்பதுதான் அவருடைய அபிப்பிராயம். இதைப்பற்றி இரண்டு விதத்திலும் சொல்லலாம். ஒன்று சர்க்கார் எடுத்து இஷ்டப்பட்டவர்களுக்கு வினியோகிக்க முடியாமல் போய்விடுமே என்று சொல்லலாம். அதே நேரத்தில், சர்க்கார் காம்பென்ஸேஷன் கொடுக்காமல் லாண்ட் ஓனராகப் பார்த்து ஏன் கொடுத்துவிடக் கூடாது என்று சொல்லலாம். ஆனால் இதிலே குறிப்பிட்ட நபர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று சர்க்கார் விதிக்கலாம்—நிலம் இல்லாதவர்களுக்குத்தான் விற்க வேண்டுமென்று விதிக்கலாம். சொந்தக்காரர்களுக்கு விற்கக் கூடாது, சாகுபடிதாரன் இருந்தால் அவனை அப்புறப்படுத்தாத முறையில் அவனுக்கு விற்கவேண்டும், விலையில் கூடக் குறைச்சல் இருக்குமானால் ஆதரைஸ்ட் ஆஃபீஸர் ஐந்து வருஷத்திய விலையை உத்தேசித்து குறிப்பிட்ட அந்த விலைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லலாம். வாங்குகிறானா இல்லையா என்று சாகுபடிதாரன் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம். இதை யெல்லாம் ரூல்ஸிலே போடலாம். இதைப்பற்றி குறிப்பிட்டு பின்னால் நான் திருத்தம் கொடுத்திருக்கிறேன். செலெக்ட் கமிட்டியிலே பரிசீலனை செய்யும்போது நோட்டிஃபைட் டேட்டிலேயே அந்த நிலம் அதில் இருக்கக்கூடிய மரம், மெஷினரி எல்லாமே சர்க்காருக்குப் போகின்றது என்று சொல்லப்பட்டது. திருத்தம் இப்போது அமைந்திருக்கிற முறையில் இல்லாமல் வேறு வகையில் அமைந்திருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, கிளாஸ் 21-ஐயும் சர்க்கார் திருத்தங்களையும் ஆமோதித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : இந்தத் திருத்தத்தைக் கொடுத்த கனம் அங்கத்தினர் ஸர்ப்ளஸ் லாண்ட் என்று ஏற்பட்டதை இரண்டு வருஷத்திற்கு மானிபுலேட் பண்ணலாம்—வேறு விற்கவோ, மாற்றவோ—சலுகை கேட்கிறார். இதை எப்படி கொடுக்க

முடியும்? அதனால் 'நேச்சர் ஆஃப் தி லாண்ட்' மாறலாம். 'ஸர்ப்ளஸ்' ஆகிய பிறகு அதை 'மானிபுலேட்' செய்ய ஒரு வித அக்கும் கொடுப்பதாக இல்லை. இப்படி கொடுக்க முடியாது.

The amendment of Sri K. G. Palaniswamy Gounder was by leave withdrawn.

The Government amendment was put and carried.

Clause 21, as amended, was put and carried.

Clauses 22 and 23 were put and carried.

Clause 24.

DEPUTY SPEAKER: The question is—

"That clause 24 do stand part of the Bill."

Sri V. K. KOTHANDARAMAN: Sir, I move the following amendments:—

In sub-clause (2) (d), for the word "two", substitute the word "five."

In sub-clause 2, after item (d), add the following as item (e)—

(*e*) the Director of Agriculture.

The amendments were duly seconded.

DEPUTY SPEAKER: The clause and the amendments are before the House for discussion.

Sri V. K. KOTHANDARAMAN: ஸார், என் பேரில் கொடுத்திருக்கக்கூடிய 24-வது கிளாசிலே, சப்-கிளாஸ் 2 (டீ)-யில் 2 என்பதற்கு பதில் 5 ஆக ஆக்கவேண்டுமென்பதுதான். அதாவது இந்த லாண்ட் போர்டு அமைக்கக்கூடிய நேரத்திலே இரண்டு பேர்கள் நாமினேட் செய்ய வேண்டுமென்று உள்ளது. இந்த இரண்டு போதாது. குறைந்த பட்சம் ஐந்து பேர்களையாவது, அதாவது சட்டசபை அங்கத்தினர்கள், கவுன்சில் அங்கத்தினர்கள், அதிலும் போதுமான அளவுக்குக் கொஞ்சம் இதிலே அனுபவமுள்ளவர்களாக, ஒரே கட்சியை சேர்ந்தவராக இல்லாமல், இங்கே நாம் எப்படி பல கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கிறோமோ அந்த வகையிலே இதிலே நல்லமுறையில் கவனம் செலுத்தக்கூடியவர்களை, கண்காணிக்கக்கூடியவர்களை மட்டும் ஐந்து பேர்களாகப் போட வேண்டுமென்பதற்காகத்தான் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கிளாஸ் 2-ல், ஐடம் டீ-யைப் பார்க்கிறபோது இந்த போர்டிலே லாண்ட் கமிஷனரைப் போட்டிருக்கிறது. அதே மாதிரி டைரக்டர் ஆப் அனிமல் அஸ்பண்டரி அவர்களைப் போட்டிருக்கிறது. ஆனால் விவசாய டைரக்டரை மட்டும் போடவில்லை. அவரையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பதுதான் என்னுடைய திருத்தம். விவசாயத்திற்கு முக்கியமானவர் விவசாய டைரக்டர். ஆகையால்தான் அவரையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்கிறேன். இதைத் தாராளமாக கனம் அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். இரண்டு என்பதை ஐந்து ஆக்க வேண்டுமென்பதில்தான் கொஞ்சம் கஷ்டமிருக்கலாம் என்று நினைக்கிறேன். அதுவும்கூட அவ்வளவு கஷ்டமாக இருக்காது. அதனாலே ஐந்து ஆக்கி விடலாம். அதனாலே இவைகள் மைனர் திருத்தங்கள்தான். ஆகவே இதையாவது தயவுசெய்து கனம் அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : (Observing a Member conversing from the House with the Officers in the Officers' Gallery) : I do not like hon. Members conversing from the House with the Officers in the Officers Gallery. It is a very bad practice.

*SRI R. SRINIVASA IYER : ஸார், இந்தத் திருத்தங்கள் தேவையில்லை. காரணம் இப்போது 24-வது கிளாசிலே சப்-கிளாஸ் 2-ஐப் பார்த்தால் ஐந்து பேர்கள் போடப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் சொல்வதுபோல் செய்ய வேண்டுமென்றால், இதை எட்டு ஆக ஆக்க வேண்டும். எட்டு என்பது எப்போதும் தகராறுதான்.

SRI V. K KOTHANDARAMAN : மந்திரிகள் எட்டு பேர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதைப்பற்றித் தாங்கள் கவலைப்படத் தேவையில்லை.

SRI R. SRINIVASA IYER. : எட்டு பேர்கள் அவசியமில்லை என்பதற்காக சும்மா சொன்னேன். எட்டு பேர்கள் ஆக்க வேண்டுமென்றால், ஐந்து பேர்களை நாமினேட் செய்தாக வேண்டும். ஆகவே கனம் அங்கத்தினர் அவர்கள் ஐந்து பேர்களை நாமினேட் செய்ய வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படிச் சொன்னதை ஐந்து நான்-அபிஷியல்களை நாமினேட் செய்ய வேண்டுமென்று சொல்லி இருந்தாலாவது பரவாயில்லை. இதில் உள்ளபடி இரண்டு பேர்களை மட்டும்தான் நாமினேட் செய்ய வேண்டியிருக்கிறது. இதில் லாண்ட் கமிஷனர், ஹை-கோர்ட் ஜட்ஜு, டைரக்டர் ஆப் அனிமல் அஸ்பண்டரி ஆகியோரர் இருக்கிறார்கள். இதிலே லாண்ட் கமிஷனர் இருப்பதால், அவர் டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் வேலைகளைப் பார்த்துக்கொள்வார். ஆகவே இந்த போர்டிலே டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் தேவையில்லை. ஆனால் பின்னாலே, "The Secretary to the Land Board shall be a Gazetted Officer nominated by the Government but he shall not be entitled to vote." என்றிருக்கிறது. இந்த மாதிரி இருப்பதால், டைரக்டர் ஆப் அனிமல் அஸ்பண்டரி அவசியமாக இருக்கிறது. காரணம் அவர் மேய்ச்சல் நிலங்களை யெல்லாம் நிர்ணயம் செய்ய வேண்டியிருக்கிறது. ஒருவருக்கு கிரேசிங் லாண்ட் வேண்டுமென்று கேட்டால், அவர் உண்மையிலேயே மாடுகள் வைத்திருக்கிறாரா, எவ்வளவு மாடுகள் வைத்திருக்கிறார், அதற்கு எவ்வளவு கிரேசிங் லாண்ட் கொடுப்பது என்பதை யெல்லாம் அவர் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. ஆகவேதான் அவரை இந்தக் கமிட்டியிலே, போர்டிலே போடப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலே டைரக்டர் ஆப் அக்ரிகல்சர் தேவையில்லை. ஒருவர் கிரேசிங் லாண்டு வேண்டுமென்று மனு கொடுத்தால், அதைக் கொடுப்பதற்கோ அல்லது கான்சல் செய்வதற்காகத்தான் இதிலே டைரக்டர் ஆப் அனிமல் அஸ்பண்டரியை போட்டிருக்கிறார்கள். தவிர, ஐந்து பேர்களைப் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். இப்போது இரண்டு பேர்களாகக் குறைத்துப் போட்டிருப்பதற்கு மற்றொரு காரணம், இந்த லாண்ட் போர்டின் நடவடிக்கைகள் சீக்கிரத்தில் நடக்க வேண்டுமென்பதற்காகவும், இதுபற்றி சீக்கீரத்திலே முடிவெடுக்க வேண்டுமென்பதற்காகவுமேயாகும். ஜாஸ்தி பேர்களைப் போட்டால், அவர்கள் கூட்டத்திற்கு வரவில்லை, ஆகவே கூட்டத்தை ஒத்திப்போட வேண்டுமென்ற நிலைமைகள் எல்லாம் ஏற்படும். இப்போது இந்த போர்டிலே பொறுப்புள்ளவர்களாக ஒரு ஹை-கோர்ட் ஜட்ஜ், லாண்ட் கமிஷனர் ஆகியோரைப் போட்டிருக்கிறார்கள். தவிர, இரண்டு பேர்கள் என்பதிலே இருவரும் நான்-அபிஷியல்களாக இருக்கலாம் அல்லது அபிஷியல்களாகவும் இருக்கலாம். அது அரசாங்கத்தின் பொறுப்பு. சர்க்கார் நல்ல முறைலே இதைச் செய்யும், அதிலே சந்தேகப்படத் தேவையில்லை என்பதை நான் நேற்றுகூட சொல்லி இருக்கிறேன். ஆகவே அந்த வகையிலே இந்தத் திருத்தங்கள் தேவையில்லை. சர்க்காரே நல்ல முறையில் அவசியம் இதைச் செய்வார்கள். நாம் இந்த உச்ச வரம்புபற்றி ஒரு முடிவு கட்டி, ஒவ்வொருவரும் இனி

மேல் தங்கள் வாழ்க்கைத் தரத்தை இப்படி திருத்தி அமைத்துக்கொள்ள வேண்டுமென்பதற்கு சீக்கிரத்திலே முடிவெடுக்கவேண்டும். ஆகவே மேலும் திருத்தங்களோ அல்லது மெம்பர்களைச் சேர்ப்பதோ தேவையில்லை என்று நினைக்கிறேன்.

*THE HON. SRI M. A. MANICKAVELU : ஸார், இந்தக் கமிட்டி விவாதித்து பேசுகிற குழு அல்ல. ஆகவே இதிலே எண்ணிக்கை குறைவாகவே இருக்க வேண்டும். அங்கத்தினர் அவர்கள் கூறுகிறபடி நிறைய இருக்கக் கூடாது. அதற்காகத்தான் முக்கியமாக இதிலே லாண்ட் கமிஷனர், ஒரு ஜட்ஜ், அனிமல் அஸ்பண்டரி டைரக்டர் ஆகியவர்களைப் போட்டிருக்கிறோம். இதைத் தவிர இரண்டு பேர்களை நாமினேட் செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் இதிலே அரசியல்பற்றி சொன்னார்கள். அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றுவது என்றாலும், இந்த இரண்டு பேரிலே ஒருவரை எதிர்க் கட்சியாளராகப் போட்டு விடலாம். இதை அரசாங்கம் பின்னாலே முடிவு செய்யும். கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது போல், ஐந்து பேர்கள் போடுவது என்று வைத்துக் கொண்டாலும், அதிலே ஒருவரைகூட எதிர்க் கட்சியைச் சார்ந்தவர்களாக போடாமல் இருந்தாலும் இருக்கலாம். அப்போது அவர் சொல்கிற கருத்தும் நிறைவேறாது. ஆகவே அதற்காகத்தான் இப்படிச் செய்ய வேண்டுமென்கிற அவசியமும் இல்லை. தவிர, டைரக்டர் ஆப் அக்ரிகல்சர், போட வேண்டுமென்று சொன்னார்கள். இதிலே லாண்டு கமிஷனரைப் போட்டிருப்பதால், அவர் தாராளமாக அந்த வேலைகளை கவனித்துக் கொள்வார். ஆகவே அவரைப் போடத் தேவையில்லை. இதிலே முக்கியமாக டைரக்டர் ஆப் அனிமல் அஸ்பண்டரி போட வேண்டுமென்பதற்காகவே, இதிலே போடப் பட்டிருக்கிறது. ஆகவே இப்போது ஐந்து என்று இருக்கிற எண்ணிக்கையை எட்டு ஆக்கத் தேவையில்லை. ஐந்து என்று போட்டு பஞ்ச பாண்டவர்களாக இதைச் செய்தாலே போதும்.

The amendments were put and lost.

Clause 24 was put and carried.

Clause 25 was put and carried.

Clause 26.

DEPUTY SPEAKER : The question is—

"That clause 26 do stand part of the Bill."

The amendment given notice of by hon. Member Sri V. K. Kothandaraman to delete this clause, is of a negative character, and hence it is clearly out of order according to the Assembly Rules. However, it is open to hon. Member to oppose the clause.

SRI V. K. KOTHANDARAMAN : ஸார், 26-வது கிளாஸிலே டெலிட் பண்ண வேண்டுமென்று சொல்லி இருக்கிறேன்.

DEPUTY SPEAKER : டெலிட் பண்ண வேண்டுமென்று சொல்வது சட்டத்திற்கு முரணானது. ஆகவே, டெலிட் பண்ணவேண்டு மென்று சொல்லக்கூடாது. வேண்டுமென்றால் கிளாஸை எதிர்த்துப் பேச லாம்.

SRI V. K. KOTHANDARAMAN : அதற்குக் காரணம் என்ன வென்றால், இப்போது ஏற்கனவே பல டைரி பாரங்கள், லைவ்ஸ்டாக் போர்டு ஆகியவைகள் இருக்கின்றன. அந்தமாதிரியான டைரி பாரங்கள் இருக்கிறதிலே எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் இப்போது இந்த

மாதிரி நிலச் சீர்திருத்தம், நிலத்திற்கு உச்சவரம்பு என்று பேசுகிற நேரத்திலே இப்படி இந்த டைரி பாரங்களுக்காக எத்தனை ஏக்கர் நிலங்கள் கொடுக்கப் போகிறீர்கள் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் இதிலிருந்து வேறு நிலங்களை அடையக் கூடிய முறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். அந்த முறையில் இது சரியாக அமையவில்லை. இந்தப் பிரிவிலே பல பேர்கள் பல 50 ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொள்ளக் கூடிய வகையிலே, இதில் இடமிருப்பதால் இதை நான் எதிர்க்கிறேன். ஏற்கனவேயே பல ஏக்கர் நிலங்கள் வைத்திருக்கிறார்கள். ஆகவே இந்த பார்மிங் முறையை சர்க்காரே ஏற்றுக்கொண்டு, அந்த நிலங்களில் எவ்வளவை உபயோகத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமோ அதை மட்டும் உபயோகப்படுத்திக்கொள்ள வேண்டுமே தவிர, இப்போதுள்ள அடிப்படை சரியல்ல என்பதால், அதைத் திருத்தியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*Sri R. SRINIVASA IYER : 28-வது கிளாஸ் லாண்டு போர்டு என்ன விஷயங்களைக் கவனிக்கவேண்டுமென்பதைப் பொறுத்தது. 11-00 a.m.

DEPUTY SPEAKER : I may inform the hon. Member that we are in Clause 26.

*Sri R. SRINIVASA IYER : ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் கிளாஸ் 28-க்கு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

DEPUTY SPEAKER : ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் வரிசையாக கிளாஸ் 26, 27 முதலிய ஷரத்துக்களுக்கு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள்.

Sri R. SRINIVASA IYER : நல்ல ஜாதி மாடுகள் வளர்க்க வேண்டும், பால் உற்பத்தி ஜாஸ்தி பண்ண வேண்டும் என்று சொல்லி அதற்காக லட்சக்கணக்கில், கோடிக்கணக்கில்கூட நியூஸிலாந்திலிருந்து பணம் வந்து வேண்டிய ஏற்பாடுகள் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பால் போதவில்லை, விலை ஜாஸ்தியாக இருக்கிறது என்று ஒரு பக்கம் சர்ச்சை இருந்துகொண்டிருக்கிறது. பால் உற்பத்தி செய்வதற்கு விவசாயத்திற்கு மாடுகள் வேண்டும். இனிமேல் மெஷினரியையே வைத்துக் கொண்டிருக்க முடியாது. நிலத்தை 5 ஏக்கராவாக ஒவ்வொருவருக்கும் பிரித்துக்கொடுத்துவிட்டால், அவர்களுக்கு கண்டிப்பாக மாடுகள் தேவை விவசாயத்திற்கு. மாடுகள் கண்டிப்பாக வளர்க்கவேண்டும். மாடுகளை சர்க்கார் வளர்த்து "டிஸ்ட்ரிப்யூட்" பண்ணிவிட முடியாது. எந்தப் பார்ட்டியாக இருந்தாலும் மாடுகளை சர்க்காரே வளர்த்துக் கொடுத்துவிட முடியாது விவசாயிகளுக்கு. தனிப்பட்டவர்கள் மாடுகளை வைத்துத்தான் வளர்த்தாக வேண்டும். தனியாக 3, 4 விவசாயிகளிடத்தில் மாட்டுப் பண்ணை இருந்தால் தான் நல்லது. பாளையகோட்டை பட்டகார் அவர்கள் 2,500 ஜோடி மாடுகள் வளர்த்து நல்ல முறையில் அபிவிருத்தி பண்ணுகிறார்கள். சர்க்கார் மட்டும் அம்மாதிரி நல்ல பசுக்களை வைத்து கன்று வளர்த்து அம்மாதிரி விருத்தி பண்ண முடியாது, நமக்கு உழவுக்கு மாடு தேவை, பால் கறப்பதற்கு மாடு தேவை, நல்ல தினுசான மாடுகள் தேவை. ஜில்லா லைவ் ஸ்டாக் பார்மில் ஒரு பசு கூட கிடையாது பிரத்தியாருக்கு கொடுப்பதற்கு. இன்னும் 20 வருஷங்கள் ஆகலாம் நல்ல ஜாதி மாடுகள், நல்ல வேலை செய்யக்கூடிய மாடுகள் கிடைப்பதற்கு. மைசூர் பூர்ணியா மாடுகள் வண்டியில் கட்டினால் குதிரையைவிட வேகமாகப் போகும். ஆடு, மாடுகள் தேவையில்லை என்று அடியோடு ஒழிப்பதற்கு காலம் இன்னும் வரவில்லை. ஜமீன்தார்களை ஒழித்துவிட்டோம், இனாம்தார்களை ஒழித்துவிட்டோம், நிலப் பிரபுக்களை ஒழித்துவிட்டோம். ஆனால் ஆடு, மாடுகளை ஒழிக்க முடியாது. ஒழிக்கவும் கூடாது. அவைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும், எப்படி அதற்கு ஊக்கம் கொடுக்கவேண்டுமோ அம்மாதிரி செய்யவேண்டும். "லைவ் ஸ்டாக் போர்டு" இதைப்பற்றி ஒரு சப்-கமிட்டி நியமித்து, ரிப்போர்ட்டு கூட ஏற்படுத்தியிருக்கிறார்கள். செலக்ட் கமிட்டியில் இதைப்பற்றி தனியாகப்

பரிசீலித்து ரொம்ப "கண்டிஷன்ஸ்" போட்டு அவர்களுக்குத்தான் பெர்மிஷன் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. யார் வேண்டுமென்றாலும் 50 எக்ரா வேண்டுமென்று கேட்டுவிட முடியாது. அதுவும் எக்கர் 1-க்கு ரூ. 1·25-க்குள்பட்ட தீர்வை இருக்கக்கூடிய நிலம்தான், தரிசு நிலம்தான் அம்மாதிரி வைத்துக்கொள்ளலாம். மாடு கூட அந்த நிலத்தில் மேயாத நிலமாக இருக்கலாம். அதிலே இனிமேல்தான் புல் வளர்க்கவேண்டியிருக்கும். "பர்டிலைஸர்" போடவேண்டியிருக்கும். அம்மாதிரி அந்த நிலத்தை அபிவிருத்தி செய்தால் தான் மேய்ச்சலுக்கு உபயோகப்படுத்த முடியும். இந்த நிலைமையில் 26, 27-வது ஷரத்துக்களுக்கு திருத்தம் கொடுத்திருக்கிறார்கள் ஸ்ரீகோதண்டராமன் அவர்கள். அது "அவுட் ஆப் ஆர்டர்" ஆக இருக்கலாம். இருந்தாலும் அதை அவர்கள் "அபோஸ்" செய்கிறார்கள். அம்மாதிரி சொல்லுவதால் மாடு வளர்ப்பு தேவையில்லை என்று அவர்கள் நினைக்கிறார்களா? மாடுகள் வளர்ப்பதற்கு போதிய நிலங்கள் தேவையில்லை, மாடுகளை விருத்தி பண்ணவேண்டிய அவசியமில்லை என்ற நோக்கமிருந்தால்தான் அம்மாதிரி திருத்தங்கள் கொடுக்க முடியும், இந்த ஷரத்துக்களை எதிர்க்க முடியும். 26, 27 முதலிய செக்ஷன்கள் மிகவும் அவசியம் இருக்க வேண்டியவை. அதுவும் அதிலே அநேக "கண்டிஷன்ஸ்" போட்டிருக்கிறார்கள்.

(*a*) the interest to be served by the development of dairy farming or livestock breeding;

(*b*) the status and previous experience, if any, of the person concerned;

(*c*) the suitability of the land to be used for dairy farming or livestock breeding;

(*d*) the number of heads of cattle, if any, owned by the person concerned, their breed and special features;

(*e*) the land already owned by the applicant for the purpose of cultivation; and

(*f*) such other matters as may be prescribed."

என்றெல்லாம் கண்டிஷன்ஸ் போட்டிருக்கிறார்கள். சும்மாவாக 4 உபயோகம் இல்லாத மாடுகள் வைத்திருந்தால் போதாது. எலும்பும் தோலுமாக மாடுகளை வைத்துக்கொண்டு எனக்கு 50 ஏகரா வேண்டும் என்று கேட்டுவிட முடியாது. மேலும் கிளாஸ் 27-ல் The Land Board shall after making such enquiry and inspection of the land or the livestock, as it deems fit என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் பார்த்துத் தான் லாண்டு போர்டு பரிசீலனை செய்து பெர்மிஷன் கொடுக்கவேண்டும். மாடு வளர்க்க வேண்டியதில்லை, அவசியமில்லை என்று சொல்லுவது நம் நாட்டிற்கு விரோதமானது. ஆகையினால் இந்த சாப்டரில் இருக்கக்கூடிய எல்லா ப்ரொவிஷன்களும் முக்கியமானது 26-வது கிளாஸ், அதற்கு பின்னாலே இருக்கக்கூடிய கிளாஸ்கள் ரொம்ப அவசியம். இதிலே கூட "கண்டிஷன்ஸ்" ரொம்ப ஜாஸ்தியாகப் போட்டிருக்கிறார்கள். இவ்வளவு "கண்டிஷன்ஸ்" "ஸாடிஸ்பை" பண்ணி மாடு வளர்க்க வேண்டுமென்று சொன்னால் கொஞ்சம் கஷ்டம்தான். அதைக்கூட கொஞ்சம் தளர்த்த வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். நல்ல நஞ்சை நிலத்திலே ½ எக்கர் 1 எக்கர் அதேமாதிரி நல்ல புஞ்சை நிலத்திலே ரூ. 1.25-க்கு மேற்பட்ட தீர்வையுள்ள நிலமாக இருந்தாலும் சரி, அதிலே கூட கொஞ்ச நிலம் fodder crop grow பண்ணுவதற்கு தனியாக ஒதுக்கவேண்டும். பச்சைப் புல் போட்டு, நல்ல முறையில் தீனி வைத்து மாடு வளர்த்தால்தான், நல்ல ஜாதி மாடுகளை விருத்தி செய்ய முடியும். விவசாயத்திற்கு மட்டும் மாடு தேவை என்பதில்லை. உழுவதற்கு மட்டும் மாடு

தேவை என்பதில்லை. ரொம்ப அத்யாவசியமாக "பார்ம் மெனியூர்" வேண்டியிருக்கிறது. நிலத்தைக் குறைத்துவிட்டோம், குறைந்த நிலம் இருந்தால்தான் ஜாஸ்தி உற்பத்தி பண்ணுவதற்கு "இன்ஸென்டிவ்" இருக்கும் என்றெல்லாம் காரணம் சொல்லுகிறோம். அதற்குள்ள சாதனங்களைக் கொடுக்காவிட்டால், விவசாய உற்பத்தி பாதிக்கப்படும். மாடுகளோடு கூட ஆடுகளும் தேவை. சர்க்கார் 'Sheep' வியாபாரம் பண்ணலாம் என்றுகூட பட்ஜெட் விவாதத்தின்போது சொன்னார்கள். "ஷீப்" வியாபாரம் பண்ணுவதற்குக் கூட ஒருவர் வளர்த்து வைத்து விற்றால்தான் அதை வாங்கி வியாபாரம் பண்ணலாம். நல்ல முறையில் Cattle breeding இருக்கவேண்டியது அவசியம். ஆகவே, இந்த 26-வது கிளாஸும் பின்னால் இருக்கக்கூடிய கிளாஸ்களும் அவசியம் என்று நான் நினைக்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, இந்த 26-வது பிரிவில் பால் பண்ணைக்காக, கால்நடைகளை வளர்ப்பதற்காக நிலங்களை தனிப்பட்டவர்கள் வாங்குவதற்கு வேண்டிய வழி வகைகள் செய்திருக்கிறார்கள். ஏற்கனவே கால்நடைகளுக்காக அல்லது பால் பண்ணைக்காக வைத்திருக்கிற நிலங்களோடு மட்டும் அல்லாமல், இனி எந்த விவசாயியும் தன் பெயரால் நிலங்களைஉச்ச வரம்பிறகு மேலாக வாங்குவதற்கு, சேர்த்துக்கொள்வதற்கு இதிலே அனுமதி அளிக்கின்ற வகையில் இந்தப் பகுதி அமைந்திருக்கிறது. இதிலே பல தவறுகள் நடக்கலாம். இதை சாக்காக வைத்துக்கொண்டு உச்சவரம்பிறகு மேலாக நிலங்களைப் பெறுவதற்கு பலர் தனிப்பட்ட முறையில் முயற்சிக்கக் கூடும் என்ற காரணத்தினால் இந்தப் பிரிவை நான் எதிர்க்கிறேன். பால்பண்ணை கூடாது என்று சொல்லுகிறவர்கள் யாரும் இல்லை. நிச்சயமாக தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பால் பண்ணைகள் ஏராளமாக ஏற்பட வேண்டியது தான். தனிப்பட்ட முறையில் இம்மாதிரி பால்பண்ணை பெரும் அளவிலே செய்யக்கூடியதை நாம் எங்கும் பார்த்ததில்லை. அரசாங்கத்தினுடைய முயற்சியினால் சென்னைக்கு பக்கத்தில் மாதவரத்தில் பால்பண்ணை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அத்தகைய முயற்சி கூட்டுறவு முறையில் நடப்பதற்கு வாய்ப்பும், வசதிகளும் இருக்கிறது. அத்தகைய முயற்சிகளை நாம் ஊக்குவிக்க முடியுமே தவிர, தனி ஒருவர் பால் பண்ணை நடத்துகிறேன் என்று சொல்லி 100 ஏக்கர், 200 ஏக்கர் அதை சாக்காக வைத்துக்கொண்டு வாங்குவதற்கு, சேர்த்துக்கொள்ளுவதற்கு வேண்டிய வழிவகைகளை நாம் செய்யக்கூடாது. இதன் மூலம் நிச்சயமாக உச்ச வரம்புச் சட்டத்தை மீறுவதற்கு வழிகோலுவதாக இருக்கும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கால்நடை வளர்ப்பைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் இன்றைய தினம் ஒரிருவர் பெரிய அளவிலே மாடு வளர்ப்பதில் அக்கறை காட்டி வருகிறார்கள். இத்தகைய பிரிவை ஏற்படுத்தினால், அதே போல "நல்ல ஜாதி பசுக்களை வளர்ப்பதற்கு எனக்கு அக்கறை இருக்கிறது. 50 ஏகரா 100 ஏக்கரா அதற்காக வைத்துக்கொள்ளுகிறேன்" என்று சாக்குச் சொல்லி உச்ச வரம்பிற்கு மேலாக நிலம் வைத்துக்கொள்ளுவதற்கு வழிவகை நிச்சயமாக ஏற்படும் என்று நினைக்கிறேன். இன்றைய தினம் இந்தத் துறையில் அக்கறை காட்டாதவர்கள் இனி தனிப்பட்ட முறையில் அக்கறை காட்டுவார்கள் என்று சொல்லுவதற்கு இல்லை. ஆடுகள் விற்பதற்கு, மாடுகள் விற்பதற்கு, பண்ணைகள் வைப்பதற்கு, நல்ல ஜாதி ஆடுமாடுகள் உண்டாக்குவதற்கு அரசாங்கம் முயற்சிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். அத்தகைய ஏற்பாடுகளை ஒரு சில இடங்களில் இப்பொழுது அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கிறது. ஹோசூர் பண்ணை, ஆத்தூரில் ஆட்டுப் பண்ணை இதே போன்று பண்ணைகள் அரசாங்கத்தின் மூலம் இருந்தால், அரசாங்கத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும், அரசாங்கம் அந்த நஷ்டத்தை ஏற்றுக்கொண்டு, மாடு அபிவிருத்தியின் அவசியத்தைக் கருதி மேலும் அம்மாதிரி முயற்சிகளில் ஈடுபடமுடியும். தனியார் துறையில் லாபத்தைக் கருதி தான் செய்யக்கூடும். இதை சாக்காக வைத்துக்கொண்டு உச்ச

வரம்பிற்கு மேலாக நிலத்தைச் சேர்த்துக்கொள்ளுவார்கள் என்பதில் நிச்சயமாக சந்தேகம் இல்லை. பால் பண்ணை வைப்பதின் பெயராலே, நல்ல ஜாதி மாடுகள் வளர்ப்பதின் பெயராலே, உச்ச வரம்பிற்கு மேலாக நிலங்கள் வாங்கிக்கொள்ளுவதற்கு இந்தப் பிரிவு வழிகோலும். ஆகவே, இதை நான் நிச்சயமாக எதிர்க்கிறேன்.

SRI M. R. KANDASWAMI MUDALIAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சபை முன்பு வந்திருக்கக்கூடிய 26-வது பிரிவை, அதாவது பால் பண்ணை முதலியன நடத்துவதற்கும் மேய்ச்சலுக்காகவும் நிலத்தை ஒதுக்கவேண்டுமென்பதை நான் ஆதரிக்கிறேன். காரணம், இன்றைக்கு உணவை அதிகமாக உற்பத்தி செய்யவேண்டும் என்று சொல்லுகிறோம். மாடுகள் வேலை செய்வதற்காக மாத்திரம் அல்ல, இன அபிவிருத்திக்காக மாத்திரம் அல்ல, மற்ற உரங்களைக் காட்டிலும் மாட்டு உரம் தான் நல்ல பலனைக் கொடுக்கிறது உணவு உற்பத்தியில் என்று விவசாய நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த நாட்டிலே இன அபிவிருத்திக்காக நல்ல மாடுகளையும், பால் தரக்கூடிய பசுக்களையும் வளர்ப்பதற்கு காடுகள் மிகவும் அவசியமாக இருக்கின்றன. சில நண்பர்கள் சொன்னார்கள். ஏதோ நிலத்தை அதிகமாக சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக வேண்டி ஒரு சிலர் அதிக நிலத்தை வாங்கிக் கொள்ளுவார்கள் என்றும், அதற்கு சர்க்கார் உடந்தையாக இருக்கிறார்கள் என்ற முறையிலும், அவர்களுக்கு அனுகூலம் செய்வதற்கு வேண்டி இந்தப் பிரிவைக் கொண்டு வந்தார்கள், ஆகவே எதிர்க்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தோடு நிலங்களை அளிக்கும்பொழுது, பால் பண்ணைக்காக அல்லது மாடுகளை வளர்ப்பதற்காக நிலம் வேண்டும் என்று ஒருவர் கோரி, அவர் வாங்குவதாக இருந்தால் கால்நடை அபிவிருத்தி செய்வதிலேயோ அல்லது பசுக்களை அபிவிருத்தி செய்வதிலேயோ அந்த துறையிலே அவர்கள் நல்ல முறையில் அந்த நிலங்களை உபயோகப்படுத்தவில்லை என்று சொன்னால், அந்த நிலங்களை கொடுக்கமுடியாது என்று மறுக்கலாம். அதற்காக மட்டும் உபயோகிக்க வேண்டும் என்று அதற்குத் தகுந்த கண்டிஷன்களைப் போட்டு, நிலத்தைக் கொடுக்கலாம். அதற்காக ஒதுக்கும் நிலத்தை மறுப்பது சரியில்லை. நண்பர்கள் ஏதோ, மாடுகளை வளர்க்க என்று சொல்லி நிலத்தை வாங்கி, பின்னால், அவர்கள் தங்கள் சொந்தத்திற்கு உபயோகிப்பார்கள் என்று என்னவெல்லாமோ சொன்னார்கள். இந்த நிலத்தை மாடுகளை வளர்க்கத் தான் கொடுக்கிறோம். அவர்கள் அப்படிக் கூட, மாடுகளை வளர்க்கவில்லை யென்றால், சர்க்கார் அதை சும்மா விட்டு வைக்காது. ஆனால், இப்படி நிலம் கொடுப்பது மிக மிக அவசியம். நண்பர் ஸ்ரீனிவாச அய்யர் சொன்னது போல, கவர்மெண்டிலேயே எடுத்து நடத்தும் கால்நடைப் பண்ணைகளைவிட, தனியார் நடத்தும் பண்ணைகள்தான் மிக மிகச் சிறந்த முறையில் நடக்கிறது. நண்பர் சுப்பிரமணியம் சொன்னார்கள், தனியார் என்றால் அவர்கள் லாபத்தைப் பார்த்துத்தான் அம்மாதிரிப் பண்ணைகளை நடத்துவார்கள், அதனால் நல்ல ஜாதி மாடுகளை வளர்க்கமாட்டார்கள் என்று. அது சரியான வாதமில்லை. நல்ல ஜாதி மாடுகளை வாங்கி நல்ல ரகமுள்ள மாடுகள் வளர்த்தால்தான், லாபம் அதிகமாக வரும் என்ற நோக்கத்தில் சிறப்பாக நடத்துவார்கள். ஆகவே, இந்த மேய்ச்சல் நிலம் கொடுப்பதில் நாம் தடை செய்யக்கூடாது. தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்று சொல்லி முடிக்கிறேன்.

SRI A. GOVINDASAMY: கனம் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவேயே நிலங்களை ஒதுக்கி அதன் மூலம் பல சிறிய மிராசுதார்கள் இந்த சட்டத்திலிருந்து தப்பிக்க பாதுகாப்புத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியெல்லாம் அரசாங்கமே விதிவிலக்கு அளித்திருக்கும் நிலையைப் பார்த்தோம். மீண்டும் இந்த 26-வது பிரிவில், உள்ளதை அப்படியே விட்டு விட்டால், மேலும் சில மிராசுதார்கள், முன் கூட்டியே கொஞ்சம் ஏமாந்து போனவர்கள், நிலங்களை மேய்ச்சலுக்கு என்று

சொல்லி வாங்கி, உச்ச வரம்பு சட்டத்திலிருந்து தப்பித்துவிடும் நிலையைத் தான் உண்டாக்குவோம். இப்படி விலக்குக் கொடுத்தலும் சட்டத்தை யாரும் மீறாது இருக்க கண்காணிப்பு இருக்கும் என்று சொல்கிறார்கள். கண்காணிப்பு என்பது இந்தமாதிரி விஷயங்களில் மிக்க கஷ்டமானது. சட்ட மன்றத்திலே அடிக்கடி நிதி அமைச்சர் சொல்லிவந்திருக்கிறார்கள். பம்பாயிலுள்ள ஆரே மில்க் பாக்டரி போல சென்னையிலும் ஏற்படுத்தப் போகிறோம் என்று. ஆனால், மிகக் குறுகிய அளவில்தான் மாதவரத்தில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஹோசூர் சர்க்கார் பண்ணை போல, மற்ற மாவட்டங்களிலும் எங்கெல்லாம் வாய்ப்பும் வசதியும் இருக்கிறதோ அங்கெல்லாம் சர்க்காரே பண்ணைகளை ஏற்படுத்துவதானால் ஆட்சேபம் இல்லை. ஆனால் தனியார் தன் சொந்த லாபத்திற்காகச் செய்வதென்றால் அது சரியாகாது. அதனால் பல மிராசுதார்களுக்கும் இந்தச் சட்டத்திலிருந்து தப்பித்துக்கொள்ளும் வாய்ப்புதான் ஏற்படும். அப்படிப்பட்ட சூழ்நிலைதான் ஏற்படும் என்று அஞ்சுகிறோம். அதனால் இப்பொழுது இந்த கிளாஸுக்கு மாறான கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் சில மிராசுதார்கள் பெரிய பண்ணைகள் வைத்து நடத்துகிறார்கள் என்றால், அது ஒரு லாபகரமான தொழிலாக இருப்பதால்தான் அவர்கள் அப்படி நடத்துகிறார்கள் என்பதையும் கனம் ஸ்ரீனிவாச அய்யர் வாதத்திலிருந்து பார்த்தோம். அந்த நிலையில், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் கால்நடைகள் வளர்த்துப் பயன் அடையும் வாய்ப்புக்கள் போய்விடும். ஏற்கனவே பல மிராசுதார்கள் சட்டத்தின் ஷரத்துக்களிலிருந்து தப்பிக்க வழி செய்தாகி விட்டது. இப்பொழுது மீண்டும், இன்னும் கொஞ்சம் தப்பிக்க வழி வைப்பது என்ற முறையில் இது இருப்பதால்தான் அது சரியில்லை என்று சொல்லுகிறோம். சர்க்காரே நடத்தும் கூட்டுறவுப் பண்ணைகளாகவோ அல்லது சர்க்கார் பண்ணைகளாகவோ இருந்தால் அதற்கு ஆட்சேபம் இல்லை. ஆனால் இந்தச் சாக்கில் தனியாருக்கு பாதுகாப்பு அளிக்கக் கூடாது என்று வற்புறுத்திச் சொல்லி முடிக்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் தலைவர் அவர்களே, இந்த ஷரத்தை நான் ஆட்சேபிக்கிறேன். அதாவது 26-வது ஷரத்து. அதனுடைய அர்த்தம் நம் நாட்டிலே கால்நடை அபிவிருத்தி அடையக் கூடாது என்று நாங்கள் சொல்வதாக சில அங்கத்தினர்கள் திரித்துக் கூறலாம். ஆனால் அது சரியல்ல. இவர்கள் எங்களுக்குப் பதில் சொல்வதற்காகவாவது கால்நடை விஷயத்தில் காருண்யம் காட்டினார்களே என்று மிக்க சந்தோஷம். கால்நடை விவசாயிகளுக்கு மிக அவசியம். குறிப்பாக விவசாயம் செய்யும் குடியானவர்களுக்கு, பசுமாட்டை விட எருதுகள்தான் அவனுக்கு மிக முக்கியமானது. அவன் பொங்கல் கொண்டாடினாலும் கொண்டாடாவிட்டாலும், பட்டிப்பொங்கல் வைக்கத் தவறமாட்டான். தினம் உழுது விட்டு, மாட்டோடு சேர்ந்து, அதை கொஞ்சநேரம் மேய விட்டால்தான் அவனுக்கு பசி ஆறின மாதிரி நினைப்பு வரும். ஆகவே அவன் எருதுகளை தெய்வமாக நினைப்பவன். பசுவையும், எருதையும் அவன் பூசிக்கிறான். அடித்துச் சாப்பிட எருது வளர்க்கமாட்டான். மாட்டை அடித்துச் சாப்பிடும் வழக்கம் நம் நாட்டில் இல்லை. மேல் நாடுகளில் அடித்துச் சாப்பிட என்றே வளர்க்கிறார்கள். ஆனால் நாம் நாட்டில் ஆட்டு மாமிசம் தான் சாப்பிடுவார்கள். மாட்டை அடித்துச் சாப்பிடுவது மட்டம் என்று நினைப்பார்கள். பெரிய பெரிய நிலப் பிரபுக்கள் கால்நடைகளை அபிவிருத்தி செய்வது அவசியம் என்று கருதுவதானால், அதே சமயத்தில் சாதாரண குடியானவர்களும் இரண்டு, மூன்று ஜதை மாடுகளை வளர்க்க வசதிகள் கொடுக்க வேண்டும். என்ன வசதிகள் இருக்கின்றன. தஞ்சாவூர் சம்மந்தப்பட்ட மட்டில், அங்கே நஞ்சைகள்தான் அதிகம். ஆனால், மற்ற ஜில்லாக்களில், குறிப்பாக புஞ்சைக்காடுகள் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில், மேய்ச்சலுக்கு என்று புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்தப் புறம்போக்கு நிலங்கள் மிக மிக அவசியம். சொந்த நிலத்திலே மேய்ச்சது போக

சமுதாயத்திற்குப் பொதுவான நிலத்திலும் வளர்க்கிருர்கள். அப்படி ஏதாவது யோசனை சொல்லட்டும். அப்படி யென்று குறிப்பிட்ட கிராமங் களில் மேய்ச்சலுக்காக என்று ஒதுக்க வேண்டும் என்று அரசாங்கம் சொன்னால் நான் வரவேற்கிறேன். அது உண்மையாக கால்நடை வளர்ச்சி யாக இருக்கும். ஏற்கனவேயே வல்லவன் வகுத்ததுதான் வாய்க்கால் என்று இருக்கிறது. நிலப்பிரபுக்கள் ஆக்ரமித்துக் கொண்டிருக்கிருர்கள். கால்நடைகள் பட்டினிதான், மேய்கால் நிலம் கிடையாது. அந்த நிலையில் இருக்கிறது. பெரிய பிரபுக்கள் நடத்தும் கால்நடைப் பண்ணைகளைப்பற்றிச் சொன்னார்கள். அவைகள் எப்படித் தோன்றின ? சாதாரண குடியான வர்கள் ரத்தத்தைச் சிந்தி அதன் மேல் அவை வளர்ந்திருக்கிறது. அதை ஹிருதயம் உள்ளவர்கள் ஒப்புக்கொள்வார்கள். அது ஒரு பக்கத்தில் இருக்க, இப்பொழுது எதிர்காலத்தில், ப்யூசர்லி நிலம் ஒதுக்குவது சம்பந்த மானதாக இருக்கிறது இது. இது சரியா ? கால்நடை வளரும் நோக் கோடு செய்தால் சரி. இப்பொழுது மேய்ச்சலுக்கு என்று விலக்குக் கொடுக்கப்படுகிறது. அதே சமயத்தில், 81-வது பிரிவைப் பார்ப்போம். "subject to the provision for grazing land" என்று இருக் கிறது. இது செலக்ட் கமிட்டியின் முன் வந்து, அங்கே ஆலோசித்து ஒதுக்கப்பட்டது. மேய்ச்சலுக்காக மட்டும் நிலம் வைத்திருந்தால், ஸீலிங் குக்கு மேலே இன்னும் 58 எக்கர் வரை வைக்கலாம் என்று, மாட்டுத் தீவனத்திற்காக உற்பத்தி செய்ய என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. 81-வது பிரிவைப் பார்க்க வேண்டும். இன்னும் ஸீலிங் ஏரியா பல ஷரத்துக்கள் படி 120 எக்ரா வரை வைத்திருக்கலாம். அதுவும் ஒவ்வொரு வர் பேரிலும் 120 எக்கரா வைத்துக் கொள்ளலாம் என்றிருக்கிறது. அதற்கு மேல் மேய்ச்சல் தரைக்கு என்று 50 எக்கர் என்ருல் (குறுக்கீடு) இல்லை ரூ. $1\frac{1}{4}$-க்கு குறைவு என்று இருக்கிறது. அதனால் இது 50 எக்கர் தான், ஸ்டாண்டர்ட் எக்கராக இருக்க முடியாது. ஆக, 170 எக்கர் போதாதா ? அப்படி எவ்வளவு கால்நடை வளர்க்க இந்த அதிகப்படி நிலம் ? இது ஒரு சாக்காக இருக்கும். உண்மை என்ன ? உச்சவரம் புக்கு அதிகமான நிலத்தை சொந்த நலனுக்காக என்று கொண்டுவந்து இருக்கும் பிரிவு என்பதால்தான் ஆட்சேபிக்கிருேம். அசல் மசோதாவில் இம்மாதிரி இல்லை. இந்த உச்ச வரம்பில் விலக்குகளுக்கு ஒரு எல்லையே இல்லை. இதில் எவ்வளவு கால்நடை வளர்ப்பார்கள் என்ருவது இருக் கிறதா ? கால்நடை வளர்க்க என்ன திட்டம் என்ருவது சொல்லி யிருக்கிருர்களா ? இதெல்லாம் ரூல்களில் ப்ரிஸ்க்ரைப் பண்ணப் படும் என்ருவது போட்டிருக்கிறதா ? ஒரு ஜாதி மாட்டுக்கு எவ்வளவு நிலம் ? இதெல்லாம் ஒன்றும் இல்லை. எல்லாம் லாண்ட் போர்ட் கையில் இருக் கிறது அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது, அவர்கள் பரிசீலனை செய்ய மாட்டார்களா என்று கேட்கலாம். அவர்கள் என்ன செய்யப்போகிருர் கள். நாட்டிற்கு விவசாயம் அவசியமானது. அதற்கு கால்நடையும் அவ சியமானது. விவசாயத்தை அபிவிருத்தி பண்ண வேண்டுமானால் கால் நடை அவசியம். கால்நடை அபிவிருத்தியானால் தான் விவசாயி தன்னு டைய விவசாயத்தை உற்பத்தி செய்யலாம். கால்நடை அவசியத்தோடு விவசாயினுடைய நலனும் அவசியமாக இருக்கிறது. விவசாயியும் சேற் றில் இறங்கி கால் சேற்றுப்புண் அடைந்து உழவேண்டியதாக இருக்கிறது. அவனுடன் கால்நடையும் சேற்றில் இறங்கி காலில் சேற்றுப் புண் உண்டாகி உழ வேண்டியதாக இருக்கிறது. ஆகவே இரண்டு பேர்களுடைய நலனையும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. இருவருக்கும் பாது காப்பு கொடுக்க வேண்டும். ஆகவே கால்நடைகளுக்காக விவசாயி பட்டினி கிடக்க வேண்டும் என்பது இல்லை. அவனுடைய உரிமையையும் பாது காக்க வேண்டும். ஆகவே கால்நடைகளுக்கு வேண்டுமானால் வேறு இடங் களில் மேய்ச்சல் நிலங்களை விட்டுக்கொடுக்கலாம். அதற்காக இருக் கக்கூடிய விஸ்திரமான நிலத்தைக் கொடுக்கவேண்டும் என்பது இல்லை. மேய்ச்சலுக்கு என்று நிலத்தை ஒதுக்கி விட்டால் மிச்சம் எவ்வளவு நிலம் இருக்குமோ. ஏற்கெனவே மூன்று வருஷங்களுக்கு முன்னதாக கணக்கு எடுத்தபோது மூன்று லட்சம் ஏக்கர் நிலம் கிடைக்குமோ என்னமோ

என்று சொன்னார்கள். ஆனால் இப்பொழுது, கணக்கெடுத்தால் இரண்டாயிரம் எக்கர் நிலம்கூட கிடைக்காது. அந்த நிலைமையில் இருக்கக்கூடிய நிலத்தை எடுத்து மேய்ச்சலுக்கு என்று கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை. அதனால் இந்த ஷரத்து இருக்கவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கு என்று நிலம் ஒதுக்க வேண்டும் என்று நினைத்தால் மேய்ச்சல் புறம்போக்கு நிலத்தை ஒதுக்கலாம். அண்டையில் இருக்கக்கூடிய காடுகளில் காட்டிலாகாவுடன் கலந்து கொண்டு மேய்ச்சல் நிலம் ஒதுக்கலாம். அந்த முறையில்தான் மேய்ச்சலுக்கு வசதி செய்து கொடுக்கவேண்டுமேயொழிய, இருக்கக்கூடிய நிலத்தைக் கொடுக்கக்கூடாது. அதனால் விவசாயம் பாதகமடையும். அதற்கு என்று அரசாங்கம் புறம்போக்கு நிலங்களை ஒதுக்கி வைக்கலாம். ஆனால் தனி நபர்களுடைய நிலத்தைமட்டும் ஒதுக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்பொழுதே கால்நடைகளின் விலை உயர்ந்து போய்விட்டது. ஆயிரம் ஆயிரத்தி ஐநூறு ரூபாய்க்கு மாட்டு ஜதைகள் விற்கப்படுகின்றன. முனிசிபாலிட்டிகள் நல்ல ஜாதி மாடுகளின் கன்றுகளை குறைந்த விலைக்கு அதாவது 200 ரூபாய்க்கு வாங்கிவிட்டு இரண்டு வருஷங்களில் 1,500-க்கு விற்கிறார்கள். இப்படி விற்பதால் அவர்கள் எந்த சமுதாயத்திற்கு நன்மை செய்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதற்காக கால்நடை அபிவிருத்திக்கு என்று ஆயிரம் அல்லது இரண்டாயிரம் எக்கர் நிலம் ஒதுக்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே இந்த 26-வது ஷரத்து அவசியம் இல்லை. ஆகவே இந்த ஷரத்தை நான் ஆட்சேபிக்கிறேன்.

*Sri A. R. SUBBIAH MUDALIAR : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, 26-வது செக்ஷனைப்பற்றி திருத்தம் கொடுத்திருக்கிறார்கள். அதை எதிர்த்துப் பேச ஆசைப்படுகிறேன். இந்தத் திருத்தத்தைக் கொடுத்தவர் விவசாயத்தில் அனுபவம் உள்ளவரா இல்லையா என்பது தெரியவில்லை. விவசாயத்தில் அனுபவம் உள்ளவராக இருந்தால் இப்படிப்பட்ட திருத்தத்தைக் கொடுத்திருக்கவே மாட்டார். கால்நடை வளர்ச்சிக்கு இவ்வளவு எதிர்ப்புக் காட்டுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை. இதை ஆட்சேபிப்பதிலிருந்தே அவர்களுக்கு விவசாயத்தில் அனுபவம் இல்லை என்றும் விவசாயத்தைப்பற்றி தெரியாதென்றும் நினைக்கவேண்டியதாக இருக்கிறது. இந்த 26-வது செக்ஷனைப்பற்றி விவாதிக்கும்போது செக்ஷன் 71, 72-ஐப்பற்றியும் கவனிக்க வேண்டியதாக இருக்கிறது. அதையும் வாசிக்க வேண்டியது அவசியம் என்று நினைக்கிறேன். அங்கே இரண்டு விதமாக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒரு தனிப்பட்ட விவசாயி இந்த முப்பது எக்கர் உச்ச வரம்பிற்குமேல் 50 எக்கர் மேய்ச்சல் பூமி வைத்துக் கொள்ளலாம் என்று 71-வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் ஒரு எக்கருக்கு 1.25 ரூபாய் கிஸ்தி செலுத்தக்கூடிய பூமிதான் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது. அதாவது கால்நடை வளர்ச்சிக்காக வைத்துக்கொள்ளலாம். அதைப்பற்றி, 71, 72-வது செக்ஷன் வரும்போது விரிவாகப் பேசிக்கொள்ளலாம் என்று இருந்தேன். செக்ஷன் 71-ல் என்ன சொல்லி இருக்கிறதென்றால்

'*Special provision for grazing lands.*—Notwithstanding anything contained in this Act, if any person has, on the date of the commencement of this Act, held land used exclusively for grazing and assessed to land revenue at Rs. 1·25 and below per acre, he shall be entitled to hold such grazing land up to an extent of fifty acres in addition to the ceiling area.'

என்று சொல்லப்பட்டிருக்கிறது. 6–4–60-ம் தேதி எவ்வளவு மேய்ச்சல் நிலம் இருக்கிறதோ அவைகள் $1\frac{1}{4}$ ரூபாய் கிஸ்தி செலுத்தக்கூடிய நிலமாக இருந்தால் அதைத்தான் மேய்ச்சல் நிலம் என்று போர்டுக்கு விண்ணப்பம் செய்து கொண்டு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. வேறு ஒன்றுக்கும் பிரயோசனப்படாத நிலமாக அது இருக்கும். அங்கு பனை

மரத்தைத்தான் வைத்து உண்டாக்கலாம். வேறு எதற்கும் உபயோகப் படாத நிலமாக இருக்கும். உடன்காடு நிலமும் என்று சொல்லுவார்கள். ஈரோடு தாலூகாவிற்குப் பக்கத்தில் அப்படி இருக்கிறது. அந்த நிலங்களுக்கு பக்கத்தில்கூட போகமுடியாது. ஒரே வெய்யிலாக இருக்கும். காலே வெய்யிலில் போனுல்கூட ஆட்கள் பொசுங்கி விடுவார்கள். அப்படிப்பட்ட இடங்களிலேதான் மாடுகளே மேய்க்கலாம். அதில் வேறு பயிர்கள் வளராது. ஆங்காங்கு மரங்களைவைத்து இப்பொழுதுதான் உண்டாக்குகிறுர்கள். அப்படிப்பட்ட மோசமான இடம் அது. அப்படிப்பட்ட இடத்தில் தான் போர்டு ஐம்பது எக்கர் கொடுக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே செக்ஷன் 72-படி அங்கெல்லாம்

'Grazing land to be taken into account for ceiling area in certain cases'.

DEPUTY SPEAKER: I want to know how it is relevant to the clause under discussion.

SRI A. R. SUBBIAH MUDALIAR: செக்ஷன் 26-ஐப் பற்றி சொல்லும்போது திருத்தத்தை எதிர்த்துப் பேசுவதற்கு செக்ஷன் 71, 72-ஐப்பற்றி சொன்னுல்தான் சரியாக இருக்கும் என்று சொல்லுகிறேன். 26 செக்ஷனில் லாண்ட் அக்விசிஷனுக்கு எடுக்கும்போது போர்டைப்பற்றி சொல்ல வேண்டும். செக்ஷன் 26-ல் போடப்பட்ட கண்டிஷன்கள் போர்டினுடைய அதிகாரத்தை கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. யார் கேட்டாலும் அக்விசிஷன் செய்துவிட முடியாது. அவர்களுக்கு கால்நடை எவ்வளவு இருக்கிறது என்றும், இதற்கு முன் கால்நடை வைத்திருந்தார்களா என்றும், எவ்வளவு நிலம் வேண்டும் என்பதைப்பற்றி போர்டுக்குச் சொல்லவேண்டும். அதன் பிறகுதான் கொடுப்பார்கள். இந்த முறையில் தான் செக்ஷன் 26 அமைந்திருக்கிறது. அதன் பிறகு 27-வது செக்ஷனில் போர்டினுடைய டெசிஷனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. சாதாரணமாக மூன்று கால்நடைக்கு ஒரு எக்கருக்கு மேய்ச்சல் நிலம் வேண்டும் என்று கணக்கெடுத்திருக்கிறுர்கள். கால்நடை வளர்ப்பைப்பற்றி சர்க்காரால் ஒரு அறிக்கை பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. அதில் மூன்று கால்நடைக்கு சராசரி ஒரு எக்கர் வைத்துக்கொள்ளவேண்டும் என்று கணக்கிட்டிருக்கிறுர்கள். கால்நடை செல்வம் நமக்கு இருக்கவேண்டியது ரொம்பவும் அவசியம். இருக்கக்கூடிய கால்நடைகள் நல்ல தரத்தில் இருக்கவேண்டும். ஆகவே அதற்கு என்று இடம் ஒதுக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அதற்கு வழிசெய்யப்பட்டிருக்கிறது இந்த செக்ஷனில். அதை இந்த லாண்ட் போர்டு நிர்ணயம் செய்யும் அளவில் இருக்கிறது. ஆகவே இந்த செக்ஷன் ரொம்பவும் அவசியம் இதற்கு திருத்தம் வேண்டியதில்லை என்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

*SRI V. K. RAMASWAMY MUDALIYAR: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் கோதண்டராமன் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய திருத்தத்தை எதிர்த்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த செக்ஷன் ரொம்பவும் முக்கியமானது. கால்நடை அவசியத்தைப்பற்றி நாம் அதிகம் பேசவேண்டியதில்லை. அது ரொம்பவும் முக்கியமானது. கால்நடை, பால் பண்ணை ரொம்பவும் அவசியம். நம் நாட்டிலேயே பால் பண்ணையைப்பற்றி அதிகம் கவனம் செலுத்தி வருகிறுர்கள். கூட்டுறவு முறையிலும் அதைக் கொண்டு வரலாம். அப்படிக் கொண்டு வந்து எல்லாவற்றையும் செய்யலாம். இதன் அவசியத்தைப் பற்றி கனம் சுப்ரமணியம் அவர்கள் சொன்னுர். கூட்டுறவு பண்ணைகளை அபிவிருத்தி பண்ணும் முறையில் மாடுகளைச் சேர்ப்பதற்கும் குடியானவர்களுக்கு வேண்டிய மாடுகளைக் கொடுப்பதற்கும் அதற்கு வேண்டிய நிலத்தை ஒதுக்குவதும் ரொம்பவும் அவசியம். அதற்கு என்று சில

நிலங்களை ஒதுக்கி வைத்தால் ரொம்பவும் நல்லது. சீலிங் வந்ததிலிருந்தே சில இடங்களில் கால்நடைகளுக்கு என்று நிலங்களை ஒதுக்கி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நிலம் கிடைக்காமல் சில இடங்களில் தங்களுடைய நஞ்சை நிலத்திலேயே ஒரு எக்கர் அல்லது இரண்டு என்று புல் சாகுபடி செய்து மேய்ச்சலுக்கு ஒதுக்கி வைத்து வருகிறார்கள். அதனால் சில இடங்களில் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அதற்கு வேண்டிய போதுமான கால்நடை நம் நாட்டில் இல்லை. அதன் காரணமாக நல்ல மாடுகள் இல்லை. சில இடங்களில் நல்ல மாடுகளை வளர்த்து வருகிறார்கள். கோயம்புத்தூர் போன்ற சில இடங்களில்தான் அப்படி வளர்த்து வருகிறார்கள். சில குறிப்பிட்ட நபர்களால்தான் அப்படி வளர்க்க முடிகிறது. அவர்கள் எவ்வளவோ வருஷங்களாக மாடு வளர்ப்பு பண்ணைகளை வைத்து வளர்த்து வருகிறார்கள். அதைப்போலவே அரசாங்கமும் கூட்டுறவு முறையில் பண்ணைகளை வைத்து மாடுகளை வளர்க்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். தனிப்பட்ட நபர்கள் சிலரால் அதைச் செய்ய முடியாது. சர்க்கார் வைத்து நடத்தினால்தான் முடியும். இதை கண்டிப்பாக சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவர முயலுகிறேன்.

கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் பேசும்போது, 11–30 a.m.
"71-வது செக்ஷனிலே ப்ரொவிஷன் எல்லாம் இருக்கிறது" என்று சொன்னார்கள். 71-வது செக்ஷனிலுள்ள ப்ரொவைஸோவைப் பார்த்தால், லாண்ட் போர்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பது தெரியும். (ஸ்ரீ எம். கல்யாணசுந்தரம் அவர்களின் குறுக்கீடு) லாண்டு போர்டு சம்மதித்தால் தான் முடியும். மேய்ச்சல் நிலத்திற்காக அப்ளிகேஷன் போட்டவுடனேயே லாண்டு போர்டு உடனே அனுமதி கொடுத்துவிடும் என்று சொல்ல முடியாது. பரிசீலனை செய்துதான் லாண்டு போர்டு அனுமதி கொடுப்பார்கள். அவசியம் இருக்கிறதா என்பதைப் பரிசீலனை செய்து பார்த்துத்தான் அனுமதி கொடுக்கப்போகிறார்கள். அப்படிப்பட்ட கட்டங்கள் இருக்கும்போது, 26-வது 27-வது செக்ஷன்கள் இப்படி இருப்பதில் யாதொரு ஆட்சேபணையும் இல்லை. இதற்கு ஆட்சேபிப்பதற்கு ஒரு விதமான நியாயமும் இல்லை. கண்டிப்பாக இந்த செக்ஷன் இருக்க வேண்டும். இம்மாதிரி வசதி செய்து கொடுத்தால் தான் கால்நடை நம் நாட்டில் நன்றாக விருத்தியாகும் என்று சொல்லி என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கின்றேன்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த 26-வது ஷரத்துக்குத் தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புவாதத்தை நான் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. ஒத்துக்கொள்வதற்கும் இல்லை. ஷரத்தை சரியாக ஊன்றிப் படித்துப் பார்த்து, "இம்ப்ளிகேஷனைச்" சரியாகத் தெரிந்து கொண்டிருந்தால், அவர்கள் அம்மாதிரியாக எதிர்ப்புக் காட்டியிருக்க மாட்டார்கள்.

SRI M. KALYANASUNDARAM : அமைச்சர் அவர்கள் தங்களை வேண்டுமானால் கெட்டிக்காரர் என்று சொல்லிக் கொள்ளட்டும். எதிராளியை முட்டாள் என்று சொல்லவேண்டாம்.

THE HON. SRI M. A. MANICKAVELU : நம்முடைய நாடு பெரும்பாலும் விவசாய நாடு. விவசாயத்திற்கு இன்றியமையாதது கால்நடை. கால்நடை என்றால் நல்ல கால்நடையாக இருக்க வேண்டும். எண்ணிக்கை அளவில் பார்த்தால், உலகத்திலேயே இந்தியாவில்தான் அதிக எண்ணிக்கையில் கால்நடை இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால், தரத்தைப் பார்த்தால், இதைவிட மோசமான கால்நடை வேறு எங்கும் இல்லை என்று சொல்லுகிறார்கள். நம் நாட்டில் உள்ள கால்நடைகள் நல்ல தரமுள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வசதி செய்ய வேண்டுமென்று அரசாங்கம் கருதுகிறது.

இப்பொழுது சில கிராமங்களில் கால்நடைகளைப் பார்த்தால் அவை பெயரளவில்தான் இருக்கின்றன. ஏரில் கட்டி உழுதால் முக்கால் மணி ஒரு மணி நேரத்திற்குள் படுத்து விடுகின்றன. இது தான் கிராமங் களில் பொதுவாகக் காணக் கூடிய நிலை.

SRI M. KALYANASUNDARAM: அதற்காகவா இப்படிச் செய்கிறீர்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU: விவசாயிகள் கால்நடை வேண்டும் என்கிருர்கள். அதுவும் நல்ல கால்நடை வைத்துக் கொள்ள வேண்டிய அவசியத்தில் இருக்கிருர்கள். அவர்களுக்கு நல்ல கால்நடை வைத்துக் கொள்ள நாம் வசதி செய்யும் போது, விவசாயிகளுக்காக கண்ணீர்வடிக்கிறதாகச் சொல்லிகிருர்களே அவர்கள் இதற்கு விரோதம் காட்டுகிருர்களே, அது ஏன் என்று எனக்குப் புரியவில்லை.

இப்பொழுதிருக்கும் நிலையில், வருஷத்திற்கு இரண்டு தடவை மாடு மாற்றவேண்டியிருக்கிறது ஒரு விவசாயி. ஏனென்ருல் அது இறந்து விடுகிறது. புது மாடு பிடிக்க வேண்டியிருக்கிறது. சட்டை மாற்றுகிருர் களே அம்மாதிரி கால்நடையை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. சிறிது காலமாவது கால்நடை உழுவதற்குப் பயன்பட வேண்டுமென்ருல், நல்ல முறையில் அவைகளைபி அவிருத்தி செய்யவேண்டியது அவசியம். விவசாய வேலைக்கு வேண்டிய மாட்டைப் பற்றிச் சொன்னேன். இனி பால்கொடுக்கும் மாடுகளைப் பார்ப்போம். பால் கறக்கிற மாடுகளும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டியது அவசியம். அனேக இடங்களில் கால் படி, அரைக்கால் படி கறக்கக்கூடிய பசுக்கள் தான் பெரும்பாலும் இருக்கின்றன நம் நாட்டில். ஆனால், மற்ற இடங்களில் சொல்கிருர்கள், மூன்று படி, நான்கு படி, பத்து படி கறக்கிறது என்று. நம் நாட்டிலும் நாம் ஓரளவு பால் அதிகம் உற்பத்தி செய்யவேண்டும். "ப்ரொடெக் டிவ் புட்" என்ற வகையில் பால், முட்டை, காய் கறி, பழம் இவை உணவுத் திட்டத்தில் மிகவும் அவசியமாக இருக்கின்றன. ஆனால், நம் நாட்டிலோ, நாம் சாப்பிடுகிற ஜாபிதாவில் அந்த அம்சங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. ஆகையால், பால் அதிகமாக உற்பத்தி செய்வதற்கு, கால்நடைப் பண்ணை வைக்க வேண்டியது மிகவும் அவசியம். வருஷத்தில் 200 நாட்கள், 300 நாட்கள் கூட முட்டையிடும் கோழிகளை எப்படிக் கோழிப்பண்ணைகளில் வளர்க்கிறோமோ, அதே மாதிரி பால் அதிகமாகப் பெருக்குதவதற்கு கால்நடைப் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் சொன்னுர்கள் 71-வது பிரிவில் "எக்ஸம்ஷன்" ஏற்கனவே இருக்கிறது என்று. அது ஏற்கனவே நிலம் வைத்திருப்பதைப் பற்றியது. உச்ச வரம்புக்கு மேற்பட்டு 50 எக்கர் வரைக்கும் ரூ. 1.25-க்கு குறைவாக தீர்வையுள்ள நிலத்தை மேய்ச்சல் நிலமாக ஏற்கனவே வைத்திருந்தால், வைத்துக்கொள்ள லாம் என்று இருக்கிறது. 71-வது ஷரத்தில் உள்ள ப்ரொவைஸோவை அவர் படிக்க வில்லையென்று நினைக்கிறேன். அதில் இருப்பதாவது—

"Provided that nothing contained in this section shall entitle any person to hold land for grazing if such person has been granted permission by the Land Board under section 27 to hold any land for dairy farming or livestock breeding."

ஒருவரே இரண்டு சலுகைகளை அனுபவிக்க முடியாது. மேலும், இதை அம்மாதிரி சலுகை இல்லாத ஒரு தனி ஆள் செய்ய வேண்டுமென்ருல் அவனுக்கு வசதி தரவேண்டும். ஏற்கனவே இருக்கிறவன் இந்த வேலைக்கு வரமாட்டேன் என்று சொல்லலாம். புதிதாக வேண்டுமென்ருல் அதற்கு வசதி செய்ய வேண்டியது அவசியம். அந்த அடிப் படையில், இம்மாதிரி யாக தரத்தை உயர்த்துவதற்காக இது அவசியம்.

ரூபாய் 1.25க்குக் கம்மியாக தீர்வை செலுத்தத்தக்க நிலம்தான் இதற்காக ஒதுக்கப்படுகிறது. அதில் ஒன்றும் விளையாது. புல் பூண்டு தான் முளைத்திருக்கும். சாகுபடி செய்வதற்கு அது பிரயோஜனப்படாது.

ஒரு கனம் அங்கத்தினர் கேட்டார், "இம்மாதிரி பண்ணையை என் அரசாங்கமே நடத்த முடியாது?" என்று. அரசாங்கம் ஹோசூரில் ஒரு கால்நடைப் பண்ணை வைத்திருக்கிறது. மற்ற இடங்களில் "கீ விலேஜ் ஸெண்டர்கள்" ஏற்படுத்தி, அங்கு காளை மாடுகள் வைத்திருக்கிகுதரு விவசாயிகளுக்கு இந்த வசதிகளெல்லாம் சாதாரணமாகச் செய்து ய்ரு கிறோம். ஆனால், மாதிரிப் பண்ணை வைக்கிற மாதிரி, பெரிய அளவிலே முதல் வைத்துச் செய்ய வேண்டுமென்றால் தனி ஆள் தான் அதம்ல வேண்டியிருக்கிறது. பொறுக்குக் கமிட்டி சுற்றுப் பிரயாணம் செதற் போது, ஈரோட்டுக்குப் பக்கத்தில் உள்ள பட்டையக்காரர் பண்ணைக்குப் போய்ப் பார்த்தோம். அங்கு போய்ப் பார்த்ததில், அரசாங்கம் நடத்தும் பண்ணைக்கும் தனிப்பட்டோர் நடத்தும் பண்ணைக்கும் ஏதோ வித்தியாசம் இருப்பதாகத் தெரிந்தது. பட்டையகாரர் பண்ணை மிகவும் நல்ல முறையில் நன்றாக நடத்தப்படுகிறது. பட்டையக்காரர் போனால், முதலாளி யார் என்று தெரிந்து கொண்டு மாடு தலையை ஆட்டுகிறது. அவ்வளவு அன்பாக மாடு கவனிக்கப்படுகிறது. பர்ஸனல் கல்டிவேஷனில் பர்ஸனல் டச் இருக்கிறது என்கிறார்களே, அந்த "பர்ஸனல் டச்" மாடு வளர்ப்பிலேகூட இருப்பதை நான் அங்கே பார்க்க முடிந்தது. மாடு அவரை நன்றாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைமையில் இருந்தது. அவருக்கு அனேகமாக எல்லா மாடுகளும் தெரியும் போல் இருக்கிறது. பெயரிட்டுக் கூப்பிட்டால் வரும் போல் இருக்கிறது. அன்று மழை பெய்ததால் ஜாஸ்தி நேரம் தங்கி பண்ணையைப் பார்க்க முடியவில்லை. அந்தப் பண்ணையை அவர் அங்கே வைத்ததற்காக அவரை நாம் பாராட்டவேண்டும். அப்படிப்பட்ட பண்ணையை அவர் அங்கு வைக்கவில்லையென்றால், காங்கயம் ஜாதிக் கால்நடையை நாம் அபிவிருத்தி செய்ய முடிந்திருக்காது. அந்த உயர்ந்த ஜாதிக் கால்நடையை இழக்க நேர்ந்திருக்கும். புங்கனூர்ப் பசு என்று சொல்வார்கள். புங்கனூர் என்பது சித்தூர் ஜில்லாவில் இருக்கிறது. அந்த ஜாதிப் பசு கன்றுக்குட்டி அளவுதான் இருக்கும். இரண்டு படிப் பால் கறக்கும். அந்த ஜாதி இப்பொழுது மறைந்தே போய்விட்டது. யாரோ ஒருவர் ஒரு பசு வைத்திருக்கிறார். அதை "எக்ஸிபிஷனில்" கொண்டுவந்து காட்டுகிறார். நானும் புங்கனூர் ஜாதிப் பசு ஒன்று வைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தால் ஒன்று கூடக் கிடைக்கவில்லை. அந்த ஜாதி அபிவிருத்தி செய்யப்படாமல் மறைந்துவிட்டது என்றே சொல்லலாம். அதற்குக் காரணம், பட்டையகாரர் போல் ஒரு தனி நபர் அந்தப் பக்கத்தில் இல்லாததுதான். நல்ல வேளையாக, ஈரோட்டுப் பக்கத்தில் பட்டையகாரர் பண்ணை ஏற்படுத்தியதன் காரணமாக காங்கேயம் ஜாதிக் கால்நடை நிலைத்திருக்கிறது. நன்றாகக் கஷ்டத்தைத் தாக்குப் பிடிக்கக் கூடிய ஜாதி அது. ஹோசூர் பண்ணையில் காங்கேயம் ஜாதியை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

(கனம் ஸ்ரீ வி. ராமையா: புதுக்கோட்டையிலும் . . .)

புதுக்கோட்டையிலும் சர்க்கார் ஆரம்பித்திருக்கிறது. கால்நடை அபிவிருத்திக்குப் பண்ணை மிகவும் அவசியம். பண்ணைக்கு நிலம் கொடுப்பதென்றால், ஏழைகளுக்குக் கொடுக்கும் நிலத்தை எடுத்துக் கொடுப்பதில்லை. "ஸீலிங் குக்கு மேல் சொந்த நிலம் இருந்தால் வைத்துக்கொள்ளலாம். அல்லது விலைக்கு வாங்குகிறதாக இருந்தால் வாங்கிக்கொள்ளலாம். அரசாங்க நிலத்தைக் கேட்கவில்லை. அரசாங்கத்தின் கையில் இருப்பதை விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் கொடுக்க வைத்திருக்கிறோம். ஆனால், சொந்த நிலம்—ஸீலிங் லிமிட்டுக்கு மேலே வைத்திருந்தால், அதை வைத்து பண்ணை ஏற்படுத்த வேண்டுமென்றால், அதற்கு அனுமதி கேட்டு வாங்கிக்கொள்ளலாம் என்று இருக்கிறதே தவிர, மற்ற நிலத்தைக் கேட்க வில்லை. இந்த நிலம் இதற்குக் கிடைக்காவிட்டாலுங்கூட, விவசாயிகளுக்கு இலவசமாகக் கொடுக்கக்

கூடிய நிலைமை இல்லை. ஆகையால், இதையெல்லாம் உத்தேசித்துப் பார்த்தால், நல்ல தரமுள்ள கால்நடை அபிவிருத்தி செய்வதற்கு இந்த ஷரத்து அவசியம் என்று சொல்லிக்கொண்டு, எதிர்ப்பு தெரிவித்ததை ஒத்துக்கொள்வதற்கில்லை.

Clause 26 was put and declared carried.

The hon. Member, Sri M. Kalyanasundaram demanded a poll and the Division Bell was rung.

Clause 26 was put again and carried.

Clause 27.

DEPUTY SPEAKER : The question is—

'That clause 27 do stand part of the Bill.'

The amendment given notice of by the hon. Member, Sri V. K. Kothandaraman, is a negative amendment and therefore it is out of order.

SRIMATHI T. N. ANANDANAYAKI : I move the following amendment :—

'In the clause, after the words "be used for dairy farming or livestock breeding", add the words "for a tope or an orchard".'

The amendment was duly seconded.

DEPUTY SPEAKER : The clause and the amendment are before the House for discussion.

SRI V. K. KOTHANDARAMAN : சார், 26-வது ஷரத்துக்குக் கொடுத்த விளக்கத்தில் இருந்து 27-வது ஷரத்து எழவில்லை என்று சொன்னபோதிலும்கூட இதைப்பற்றி கொஞ்சம் விளக்கிச் சொல்ல விரும்புகிறேன். ஏதோ கால்நடைகளை ஒழித்துக் கட்டிவிடவேண்டுமென்று பாலே இல்லாமல் செய்துவிடவேண்டுமென்ற நோக்கத்தோடு அல்ல நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருப்பது. மேலும் கால்நடைகளை அபிவிருத்தி செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடுதான் கொடுத்திருக்கிறேன். அப்படிச் செய்யவேண்டுமென்று சொன்னால் கால்நடைப் பண்ணைகளை சர்க்காரே ஏற்று நடத்தாவிட்டாலும்கூட கூட்டுறவு முறையிலே நடத்த வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். நமது பிரதமர் நேருஜி முதற்கொண்டு கூட்டுறவு முறைகளைப் பற்றிப் பேசிவிட்டு—மிகப் பெரிய கன இயந்திரத் தொழிற்சாலைகளுக்குக்கூட—சர்க்காரால் முதலீடு செய்ய முடியவில்லை—ஆகவே தனியாரிடமே கொடுத்துவிடுகிறோம் என்றுதான் செய்கிறார்கள். பேசப்படுகிறது கூட்டுறவு வளர்ச்சிகளைப்பற்றி. ஆனால் சுதந்திராக் கட்சியின் கொள்கைகளைத்தான் நிறைவேற்றி வருகிறார்கள். குறிப்பாக இந்தச் சபையிலேகூட திரு. ராமசாமி முதலியாருக்கு என்ன பேசுவது என்று தெரியாது குழம்பிவிடக்கூடிய வகையில், வேலையே இல்லாத அளவுக்கு திரு. சீனுவாச ஐயர் அவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். அதுவும் காலையிலே மிகவும் மோசமான நிலையில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுடைய நிலைமையை உயர்த்துவதற்கு கூட்டுறவு முறையில் ஏதேதோ உதவி செய்வதாக அமைச்சர் அவர்கள் கூடச் சொன்னார். ஆகவேதான் கால்நடை வளர்ப்பு, பால்பண்ணை முதலிய

வற்றை கூட்டுறவு முறையிலேயே ஏற்படுத்தவேண்டுமென்றும், அதற்கு இது உதவியாக இருக்கும் என்றும் நான் சொல்ல விரும்புகிறேன். தனியார் துறையில் இருக்கத்தான் வேண்டும் என்று அமைச்சர் கருதினால்—அவர்களைக்கண்டு மாடு தலையாட்டுகிறது, வாலையாட்டிக்கொண்டு வருகிறது என்று பேசலாம். அது இல்லையென்றால் இதை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

Srimathi T. N. ANANDANAYAKI : கனம் உதவி சபா நாயகர் அவர்களே, ஷரத்து 26-லேயே அந்தத் திருத்தத்தைக் கொடுத்து இருந்தேன். ஒருவகையில் முடிந்துவிட்டது. இருந்தபோதிலும் ஷரத்து 27-லே இது என் கொடுக்கப்பட்டது என்பதை எடுத்துச் சொன்னால் ஒரு வேளை இந்தத் திருத்தம் நாளைக்கு அவசியமானது என்று சர்க்கார் கருதினால் இதைக் கொண்டுவருவதற்கு வசதியாக இப்போதே அதை விளக்கி வற்புறுத்த விரும்புகிறேன். பால் பண்ணை விஷயமாக, ஆடு மாடுகள் வளர்ப்பு விஷயமாக ஒரு முடிவுக்கு வந்து இன்றைய தினம் உச்சவரம்புக்கு மேல் அவைகளுக்கு தனியாக நிலம் ஒதுக்கவேண்டும் என்று ஒத்துக்கொண்டிருக்கிறோம். அதற்காக மேய்ச்சல் காடு தேவை என்று லாண்டு போர்டுக்கு விண்ணப்பித்துக்கொண்டால் சீலிங் அளவுக்கு மேல் நிலம் ஒதுக்க வசதி செய்திருக்கிறோம். மேலும்,

'lands converted into orchards or topes or arecanut gardens, on or before the 1st day of July 1959'

என்று தோட்டங்களுக்கு ஹில் ஏரியாவில் விதிவிலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. 1959-ம் வருஷம் ஜூலை மாதம் 1-ந் தேதிக்கு முன்பே ஒருவன் இந்தச் சட்டம் வந்தால் என்ன செய்வது என்று தெரிந்தோ அன்றித் தெரியாமலோ பழத்தோட்டம், தோப்பு போட்டிருந்தால் அவனுக்கு இந்த மசோதாவில் விலக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அன்று தூங்கிவிட்டவனுக்கு—ஒன்றும் வழி செய்து கொள்ளாது இருந்துவிட்டவனுக்கு—இன்று பழத்தோட்டம் போடலாம் என்றாலும்கூட வழியில்லை. அவன் பழத்தோட்டம் போடுவது என்றாலும் சீலிங் 30 ஏரியாவுக்குள்தான் போட்டுக்கொள்ள முடியும். பழத்தோட்டம் போட வேண்டுமென்றால் நிலத்தைப் பெறுவதற்கு இந்தச் சட்டத்தில் இடம் கிடையாது. பால் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது பழம். எந்த டாக்டரைக் கேட்டாலும் வைட்டமின் ஸி-க்குப் பழத்தைச் சாப்பிடச் சொல்கிறார்கள். கொஞ்சம் கூடுதலான மக்களுக்குப் பழம் கிடைக்கவேண்டுமென்றால் அதிகமான பழத்தோட்டம் ஏற்பட வசதியிருக்கவேண்டும். அதுவும் இப்போது பலரகமான திராட்சை பயிரிடுகிறார்கள். துரதிருஷ்டவசமாக நம் தமிழகத்தில் பாலும் கிடையாது, பழமும் கிடையாது. ஜூலை 1959-க்கு முன் பழத்தோட்டம், தோப்பு வைத்தவன் சீலிங் அளவுக்கு மேல் 40, 50 எக்கர் வைத்துக்கொள்ள முடியும். சட்டம் வந்த பிறகு ஒருவன் பழத்தோட்டம் வைப்பதானாலும் 30 எக்கருக்குள்தான் வைத்துக் கொள்ளவேண்டும் என்று சொல்வது ஒரு பிரஜைக்கும் இன்னொரு பிரஜைக்கும் காட்டுகிற பாரபட்சமாகத்தான் இருக்கும். இதிலே நியாயம் கிடையாது. அதுவும் பால்பண்ணைக்கு நிலம் பெற வசதி இருப்பது போல பழத் தோட்டத்திற்கும் நிலம் பெற வசதி இருப்பதுதான் நியாயமாகும் என்ற காரணத்தினால் பாலுக்குக் காட்டும் பரிவை பழத்திற்கும், தோப்புக்கும் காட்ட வேண்டுமென்று சொல்லிக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

Srimathi A. S. PONNAMMAL : கனம் உதவி தலைவர் அவர்களே, இன்றையதினம் இருக்கக்கூடிய நிலையில் ஏதோ இது வரை இருந்த பழத்தோட்டங்களுக்கு விதிவிலக்கு செய்திருக்கிறோம், கரும்புக்கு விதிவிலக்கு செய்திருக்கிறோம். இனிமேலும் பழத்தோட்டம் போடுபவர்களுக்கு விதிவிலக்கு கொடுக்கவேண்டுமென்று சொன்னால் கேரளாவில் கூட உணவுப்பற்றுக்குறை ஏற்பட்டு மோசமான நிலை இருந்து

கொண்டிருக்கிறதை நான் கூறவேண்டியதில்லை, அமைச்சர் அவர்களுக்கும் அது தெரியும். இனி, படிப்படியாக மக்கள் சக்தி கிளம்பிவரும்போது செய்து கொள்ளலாம். அந்த நம்பிக்கை என் போன்றோருக்கு இருக்கிறது. இனி பழத்தோட்டம் போடுகிறவர்களுக்கும் விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்வது நல்லதல்ல. அப்படி கொடுக்கக்கூடாது. மாடுகள், விலங்குகளுக்கு நிலம் ஒதுக்குகிறோம், கால்நடையை விருத்தி செய்ய வேண்டுமென்று. அது வரவேற்கக்கூடியதே. இனிமேலும் ஏற்படும் பழத்தோட்டங்களுக்கு விதிவிலக்கு கொடுங்கள் என்று திருத்தம் கொண்டு வருவது நல்லதல்ல. அதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று வற்புறுத்திகூறி முடித்துக் கொள்கிறேன்.

(Sri N. S. Ramalingam in the Chair.)

*Sri R. SRINIVASA IYER : இந்த 27-வது கிளாஸ் லாண்ட் போர்ட் நிலத்தைப் போய் பார்த்து கால்நடை வளர்ப்பதற்கு உபயோகப்படுமா, படாதா என்பதை எல்லாம் பரிசிலனை செய்து பார்ப்பதற்காக ஏற்பட்ட ஒரு செக்ஷன். கால்நடை என்பதில் ஆடு வருமா வராதா என்று ஒரு அங்கத்தினர் சந்தேகப்பட்டு பேசினார்கள். அவருக்கு விவசாயத்தில் எவ்வளவு அனுபவம் இருக்கிறது என்பது அதிலிருந்தே தெரிகிறது. செம்மறி ஆட்டை கடை கட்டி, அதன் உரத்தைப் போட்டால் கேப்பை நாற்று, நெல் நாற்று எப்படி வரும் தெரியுமா? ஒருவருடம் உரம் போட்டால் மூன்று வருடத்திற்கு அந்த நாற்றங்காலுக்கு உரமே தேவையில்லையென்று தெரியுமா? பன்றி உரம் போட்டால் 10 வருடத்திற்கு உரம் தேவையில்லையென்று தெரியுமா? கோழி உரம் போட்டால் எப்படி விளையும் தெரியுமா? மாடு, ஆடு, பன்றி, கோழி வளர்ப்பதெல்லாம் "லைவ் ஸ்டாக் ப்ரீடிங்." தெரியாதென்றால் நான் சொல்லித் தருகிறேன். துரதிருஷ்டவசமாக நான் ஆளும் கட்சியில் இருப்பதால் நான் எப்பொழுது பேசினாலும் என் துரதிருஷ்டத்தினால் பத்து நிமிடத்தில் மண்டையில் அடித்து விடுகிறார்கள். எதிர்கட்சியில் நாலைந்து பேர்கள் இருந்தாலும், தலா 40, 50 நிமிடங்கள் பேசலாம். மற்றவர்கள் பேசியதை நான் பேசியதாக ஸ்ரீ கோதண்டராமன் அவர்கள் நினைக்கவேண்டாம். எனக்காக நான் தான் பேசுகிறேன். நியாயமாகப் படுவதை நான் பேசுகிறேன். கூட்டுறவு முறையில் சாகுபடி செய்யலாம் என்று மதிப்பிற்குரிய நேரு அவர்களின் பெயரைக்கூட இதில் இழுத்து பேசுகிறார்கள். தனியார் துறைக்கு இண்டஸ்ட்ரீஸ் கொடுக்கலாமா, கூடாதா என்பது இதில் வருகிறதா? பேச்சு மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடுவது போல் இருக்கிறது. பட்ஜெட் பிரசங்கத்தில் பேசியபோது, ஆடு வளர்த்து அதன் மூலம் மாமிசம் பெற்று சர்க்கார் வியாபாரம் செய்யலாம் என்று சொன்னால், இந்தக் கசாப்புக் கடை வியாபாரம் செய்வதா? சர்க்காருக்கு நல்ல வியாபாரம். ஆக, 26, 27, 28-ல் பேசிய பிறகு இதில் பேச வேண்டிய அவசியமில்லை. அனுவசியமாக என்னைக் குறிப்பிட்டதால் சொல்கிறேன். ஆடும், கோழியும் கால்நடைதான். நான் பிருமணன். நான் மாமிசம், "எக்" கூட சாப்பிடுவதில்லை. ஆனால் நான் கோழிப்பண்ணை வைத்து நடத்துகிறேன். செம்மறி ஆடுகள் வைத்திருக்கிறேன். கால்நடைப் பண்ணை இருக்கிறது. விவசாயிகளுக்காக பரிந்து பேசி பாடுபடுகிறவர்கள், "மேழிச் செல்வத்தைப்" படிக்கிறார்களா இல்லையா என்று சந்தேகமாயிருக்கிறது. இந்த மாதம் மேழிச் செல்வம் "லவுஞ்ச் ரூமில்" இருக்கிறது, அதில் ரசாயன உரம் பற்றி எழுதியிருப்பதைப் படிக்கட்டும். மாடு, ஆடு, கோழி உரம் இவையெல்லாம் மிகவும் நல்லதென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏராளமாக விவசாயிகள் கொண்ட நாடு நம் நாடு. விவசாயத்திற்கு உழைப்பு மட்டும் போதாது, உரமும் வேண்டும். நான்-வெஜிட்டேரியன்ஸ் சாப்பிடக் கூட, கறி சாப்பிடக் கூட கால்நடை அவசியம் வேண்டும். செம்மறி ஆடானால் என்ன, வெள்ளாடானால் என்ன அவைகளை வளர்க்க வேண்டும். இல்லாவிடில் ஆடு 40 ரூபாய்க்குக்கூட கிடைக்காது. ஒரு சேர் கறி முக்கால் ரூபாயிலிருந்து ஒரு

ரூபாய் வரை விற்கிறது. ஆகவே, one egg for each child in a family என்று சொல்லக் கூடியவர்கள் எந்த முறையில் இந்த ஷரத்தை எதிர்க்கிறார்கள் என்று புரியவில்லை. எந்தக் காரணத்தைக் கொண்டாவது பிரசாரம் செய்ய வேண்டும். விவசாயிகளுக்காக நாங்கள் பாடுபடுகிறோம் என்று சொல்கிறார்கள், ஏதோ வேறு உலகத்தில் வேறு யாருமே அவர்களுக்காக பேசுவதற்கு பிறக்கவில்லை என்பது போல் பேசுகிறார்கள். 27, 28, 29-யைப் பார்த்தால், நல்ல ப்ரீடாக இருக்கிறதா, மாடு வளர்க்கும் அனுபவம் உண்டா என்று பார்க்க வேண்டுமென்று இருக்கிறது. நானும் ஒரு cattle breeder தான். முரா, சிந்தி, காங்கேயம், க்ராஸ் ப்ரீட் இவைகளை வளர்த்து பப்ளிக்-க்கு உதவி செய்ய வேண்டியிருக்கிறது, சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. பின், கால்நடைகளுக்கு புல் வேண்டாமா? ஊரில் எங்கு போய் மேய்வது? கட்டிப் போட்டு தீனி கொடுத்தால் கால்நடைகள் வளராது. ஆக, எதைக் கொடுத்தாலும் ஆட்சேபிப்பது இவர்கள் வேலையாய் போய் விட்டது. அவர்கள் பேசினால் நான் ஏன் பேசக் கூடாது? பார்ட்டி மாறாமல் பேசுகிறார் என்றால் அப்படி மாறுவது எங்கள் பழக்கமல்ல. பச்சோந்தி மாதிரி மாறிக்கொண்டிருக்கிறவர்கள் மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஆக, கால்நடை என்பதில் என்னென்ன சேரும் என்று தெரியாமலேயே ஆட்சேபிப்பது முறையல்ல. இதை, ஏற்றுக்கொள்ளவேண்டும்.

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, இந்தக் கிளாஸிற்கு திருத்தம் கொடுத்திருப்பதை ஆட்சேபித்து நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அனந்தநாயகி அவர்கள் பேசியதற்கும், பொன்னம்மாள் அவர்கள் பேசியதற்கும் கருத்தை ஊன்றி கவனிக்க வேண்டும். ஆளும் கட்சியிலும் சுதந்திராக் கட்சிக் கொள்கை உடையவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் ஸ்ரீனிவாஸ ஐயர் போன்றவர்களுக்கு ஆத்திரம்தான் வருகிறது, கோபம் வருகிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member should not cast such insinuations against Congress Members, if he does not know the policy of other parties.

SRI A. GOVINDASAMY : சுதந்தராக் கட்சி சொல்வதை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலர் சொல்வதை சொல்ல வேண்டித்தானிருக்கிறது. திருத்தம் கொடுத்திருக்கும் அம்மையார் அவர்கள் இது ஆளும் கட்சியின் கொள்கை என்று சொன்னார்கள். விவசாய அமைச்சர் அவர்கள், உச்சவரம்பிற்கு உட்பட்ட நிலத்தில் பழத்தோட்டங்கள், தோப்புகள் போன்றவைகளை வைத்துக் கொள்ளலாமே என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். ஆக, ஆளும் கட்சியின் உண்மையான கொள்கையைப் புரிந்து கொண்டிருந்தால் ஆளும் கட்சிக் கொள்கைக்கு அப்பாலும் சில கருத்தை சொல்ல வேண்டுமென்ற முந்திரிக்கொட்டை மாதிரி முந்திக் கொண்டு சொல்வதைப் பார்க்கும்போது இந்தக் கருத்தை இங்கு வலியுறுத்த சொல்ல வேண்டியிருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : The hon. Member should not abuse other hon. Members. If he calls one as 'முந்திரிக் கொட்டை' somebody else will call him "வேர்க்கடலை".

SRI A. GOVINDASAMY : நான் முந்திரிக்கொட்டை என்று குறிப்பிட்டது..............

SRI M. R. KANDASWAMY MUDALIAR : கனம் கோவிந்தசாமி அவர்கள் ஒவ்வொருவருக்கும் தங்களுடைய கருத்தை வெளியிடுவதற்குரிய உரிமை இருக்கிறது என்று குறிப்பிடுகிற நேரத்தில் முந்திரிக்கொட்டை மாதிரி சிலர் எழுந்து தங்கள் கருத்துக்களை சொல்லுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இப்படி அங்கத்தினர்களை முந்திரிக்கொட்டை என்று 12-00 noon.

குறிப்பிடுவது அங்கத்தினர்களுடைய உரிமையை பாதிப்பதாக இருக்கிறது. அதோடு அங்கத்தினர்களுக்கு கேவலம் ஏற்படுத்துவதுமாக இருக்கிறது. ஆகவே கனம் கோவிந்தசாமி அவர்கள் இந்த வார்த்தையை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

TEMPORARY CHAIRMAN (Sri N. S. RAMALINGAM): ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் கருத்தை வெளியிடுவதற்கு உரிமையுண்டு. கனம் அங்கத்தினர் அவர்கள் முந்திரிக்கொட்டை என்று குறிப்பிட்டதை பலர் ஆட்சேபிப்பதால், இனிமேல் அம்மாதிரியான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMY : ஒவ்வொருவரும் தங்கள் கருத்தை சொல்லுவதற்கு உரிமை இருக்கின்றது என்று சொல்லுகின்ற நேரத்தில் துரதிருஷ்டவசமாக நாங்கள் ஆளும் கட்சியில் இருக்கின்ற காரணத்தால் சில கருத்துக்களை சொல்வதற்கு இடமில்லை என்ற குறிப்பை கனம் சீனிவாச அய்யர் அவர்கள் குறிப்பிட்டார்கள். (குறுக்கீடு) நான் சொல்லுவதை தவறு என்று சொல்லமுடியாது. வேண்டுமென்றால் சர்க்கார் ரிக்கார்டையே பார்க்கலாம். நாம் ஏற்கனவே தோப்புகளுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். 1959-ல் சிலர் முன்னெச்சரிக்கையாகவே இவ்விதமான விதிவிலக்கு வரும் என்று தெரிந்ததின் காரணமாக தோப்புகளாக தங்கள் நிலத்தை மாற்றி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சட்டத்தை முதலில் இங்கு கொண்டு வந்த நேரத்தில் இந்தப் பிரிவை அப்போது யார் யார் எதிர்த்தார்களோ அவர்களே இப்போது இன்னும் இதற்கு விதிவிலக்கு வேண்டும் என்று சொல்லுகின்ற நிலைமையை நாம் பார்க்கின்றோம். இவ்விதமான விதிவிலக்கு வரும் என்று தெரிந்த காரணத்தினால் பலர் தென்னந் தோப்புகளாகவும், சவுக்குத் தோப்புகளாகவும், முந்திரித் தோப்புகளாகவும் மாற்றி வைத்துக் கொண்டார்கள். அவ்விதம் மாற்றிக்கொள்ளாதவர்கள் இனிமேலும் மாற்றிக் கொள்வதற்கு உதவுவதற்காகத்தான் இந்தத் திருத்தம் கொடுக்கப்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆகவே இந்த அரசாங்கம் உண்மையிலேயே இந்தச் சட்டத்தின் மூலமாக ஏழை மக்களை காப்பாற்றுவதற்காக முன் வருகிறது என்றால், நிச்சயமாக இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று கேட்டுக் கொள்வதோடு, இந்தத் திருத்தத்தை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று கூறி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

***Sri M. P. SUBRAMANIAM :** சபைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரிவின் மீது ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் " மேய்ச்சல் நிலம் பால் பண்ணைக்கு நிலம், இவைகளோடு தோப்புக்கள், பழத்தோட்டங்கள் இவைகளுக்காக நிலம் வாங்க தடையிருக்கக் கூடாது என்ற அடிப்படையில் " கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தத்தை அரசாங்கம் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது என்று நான் நினைக்கிறேன். இதைப்பற்றி மேலும் விரிவாக பேச வேண்டிய அவசியமில்லை என்று நினைக்கிறேன். இதற்காக நான் திருத்தம் கொடுக்கவில்லை என்றாலும், ஒரு கருத்தை வலியுறுத்த நான் விரும்புகிறேன். அதாவது கனம் சீனிவாச அய்யர் அவர்களும், கனம் சுப்பையா முதலியார் அவர்களும் உணவு சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்களைத்தான்பெரும்பாலும்மாட்டுப் பண்ணைக்காகவும்,பால்பண்ணைக்காகவும்உபயோகப்படுத்தப்படுகின்றது என்று சொன்னார்கள். ஆகவேஇம்மாதிரி நிலங்களை உபயோகிப்பதால் எந்தவிதமான நஷ்டமும் வந்துவிடப் போவதில்லை என்கின்ற கருத்தை தெரிவித்தார்கள். அந்தக் கருத்தை ஒட்டியே நான் சொல்லக்கூடிய திருத்தத்தை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதாவது இந்தப் பிரிவில் லாண்ட் போர்ட் நேரடியாகப் போய் பார்த்துத்தான் இந்த இடங்களை தீர்மானிக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் லாண்ட் போர்ட் நேரடியாக பார்த்து எது சாகுபடிக்கு லாயக்கில்லாத நிலங்களாக இருக்

கின்றதோ அவைகளைத் தான் இந்த பால் பண்ணைகளுக்கும், மாட்டுப் பண்ணைக்கும் கொடுக்கலாம், அல்லது அதற்கான அனுமதி கொடுக்கலாம் என்று இருக்கவேண்டும். இப்போது இதில்.......... " with advantage be used for dairy farming or livestock breeding " என்றிருக்கிறது. உணவு சாகுபடிக்கு லாயக்கில்லை என்று கருதப்படும் நிலங்களில்தான் பால் பண்ணையும், மாட்டுப் பண்ணையும் வைக்க அனுமதி கொடுக்கப்படும் என்ற திருத்தத்தை, இங்கே விவசாயத்தை நன்கு தெரிந்தவர்கள் என்ற முறையில் பேசினவர்களின் கருத்தை அடிப்படையாக கொண்டு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **THE HON. SRI M. A. MANICKAVELU** : 26-வது பிரிவு முன்னாலேயே நிறைவேற்றப்பட்டுவிட்டது. இப்போது சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு இந்தப் பிரிவில் இடமேயில்லை. எந்தவிதமாக 26-ல் சொல்லப்பட்ட காரியங்களை நிறைவேற்றவேண்டும் என்பதைத்தான் இந்த 27-வது பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறது.

(Deputy Speaker in the Chair).

ஆகவே இதில் எந்தவிதமான திருத்தத்திற்கும் அவசியமில்லை. ஆனாலும் இதில் பேசினவர்களுக்குப் பதில் சொல்லியாக வேண்டும். முதலாவது, இனிமேலும், தோப்பு, பழவர்க்கம் இவைகளை வளர்ப்பதற்கு இடம் கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஏற்கனவே இதற்கெல்லாம் இச்சட்டத்தில் இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இடம் கொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும் என்று சொல்வது சரியல்ல. அதிலும் சாதாரண இடங்களில் பழம் காய்கறிகள் எல்லாம் நன்றாக வளராது. கனம் அம்மையார் அவர்கள் ஏதாவது வளர்க்கவேண்டும் என்று விரும்பினால் நீலகிரி பக்கத்தில் ஏதாவது இடங்களைப் பார்த்து வாங்கி இதை வளர்க்கலாம். மலைப்பிரதேசத்தில்தான் இவைகள் எல்லாம் நன்றாக வளர முடியும். அந்தப் பிரதேசத்தில் தான் நல்ல ஆப்பிள், பளம் இவைகள் எல்லாம் கிடைக்கின்றன. சாதாரண பூமியில் இவைகள் நல்லமுறையில் வளராது. ஆகவே தான் மலைப்பிரதேசங்களுக்கு விலக்கு கொடுத்திருக்கிறோம். ஆகவே இனிமேலும் விதிவிலக்கு கொடுக்கவேண்டிய அவசியமில்லை. மேலும் கனம் சுப்பிரமணியம் அவர்கள் விவசாயத்திற்கு உபயோகமில்லாத நிலங்களை பால் பண்ணைக்கும், மாட்டுப் பண்ணைக்கும் கொடுக்கலாம் என்ற திருத்தத்தை சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். 26-வது எ. பிரிவில்...........

the extent and other particulars of the land proposed to be acquired and those of the land, if any, already held by the applicant

என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் முன்பே நன்றாக கவனித்துத்தான் இந்த பிரிவுகள் எல்லாம் போடப்பட்டிருக்கின்றன. இன்னும் திருத்தங்களை எல்லாம் சேர்த்துக்கொண்டே போனால், அல்லது நாம் மனதில் நினைப்பதை எல்லாம் இந்தச்சட்டத்தில் கொண்டு வரவேண்டும் என்று சொன்னால் இந்தப் புத்தகம் இன்னும் பெரிதாகிவிடும். ஆகவே மனதில் இருப்பதை எல்லாம் சட்டத்தில் கொண்டுவரமுடியாது. இந்தப் பிரிவின் கீழ் எ. என்கிற பிரிவு இதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏதோ விவசாயத்தைப்பற்றி யெல்லாம் சொல்லப்பட்டது. சிலர் விவசாயத்தை தெரியாமல் தான் சில கருத்துக்களை சொன்னார்கள் என்று நினைக்கிறேன். மாடு வாலை ஆட்டிக்கொண்டு வருகிறது என்று சொன்னார்கள். சாதாரணமாக நாய் தான் வாலை ஆட்டிக்கொண்டு வருமே தவிர மாடு வாலை ஆட்டிக்கொண்டு வராது. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு நாய் வளர்ப்பதில்தான் அதிக ஈடுபாடு இருக்கும் என்று

நினைக்கிறேன். மாடு வளர்ப்பதில் அவ்வளவு பழக்கம் இருக்காது என்று தோன்றுகிறது............(சிரிப்பு). ஆகவே இந்தப் பிரிவில் எந்த விதமான திருத்தமும் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

The amendment was by leave withdrawn.

Clause 27 was put and carried.

Clauses 28 to 37 were put and carried.

Clause 38.

DEPUTY SPEAKER: The question is:

"That clause 38 do stand part of the Bill".

DEPUTY SPEAKER: So far as Sri M. P. Subramaniam's amendment is concerned, it is of a negative character and is therefore out of order. He can oppose the clause. But he cannot move an amendment for deletion of the clause.

* SRI M. P. SUBRAMANIAM: துணைத்தலைவர் அவர்களே, நான் கொடுத்த திருத்தம் சரியில்லை என்று சொல்லி விட்டீர்கள், அதை ஒப்புக்கொள்கிறேன். நான் சொல்வது இந்தப் பிரிவு கூடாது என்பது தான். இந்த ஷுகர் ஃபாக்டரி போர்டு என்று அமைக்கும் பிரிவு பூராவும் தேவையில்லை என்று சொல்லும் காரணம் கரும்பு சாகுபடிக்கே விதிவிலக்கு கூடாது என்று சொல்லுவது தான். அந்தக் கொள்கையை ஒப்புக்கொண்டால் இந்த பிரிவுகள் தேவையற்றதாக ஆகிவிடுகின்றன. விதி விலக்கு ஏன் கொடுக்கக் கூடாது என்பதற்குரிய காரணங்கள் பல சமயங்களில் பல அங்கத்தினர்களால் சுட்டிக்காட்டிய படி கரும்பு சாகுபடிக்குப் போதிய நிலம் கிடைக்காமல் இருக்கிறது என்கின்ற நிலை எங்குமே இல்லை என்று இந்தச் சபைக்கு நான் தெளிவாகக் கூற விரும்புகிறேன். எங்கே சர்க்கரை ஆலை ஏற்பட்டிருக்கிறதோ அங்கேயெல்லாம் எங்கு பார்த்தாலும் எங்கள் நிலங்களையும் பதிவு செய்துகொள்ளுங்கள் என்று போராட்டம் இருந்துகொண்டிருக்கின்றது. அப்படி கரும்பு சாகுபடிக்கு நிலம் கிடைக்கவில்லை, அதற்காக பாதுகாப்பு அளிப்பதற்காக விதிவிலக்கு அளித்து கரும்பு சாகுபடியை மேலும் அதிகமாக்குவதற்காக விவசாயிகளை உற்சாகப்படுத்தக் கூடிய நிலைமை இல்லை. இதையெல்லாம் சேர்த்திருப்பதிலிருந்து உண்மையிலேயே கம்பு சாகுபடி பற்றி சரியான எண்ணம் அரசாங்கத்தின் தரப்பில் இல்லை என்று இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உதாரணத்திற்காக நெல்லிக்குப்பத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலையை எடுத்துக்கொண்டால், அந்த ஆலைக்கு அருகில் இருக்கக் கூடிய 2-3 தாலூகாவிலுள்ள விவசாயிகளுக்கு எக்கருக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் வருகிறது என்று அந்த வட்டாரத்தில் இருக்கும் எல்லோருக்கும் தெரியும். அங்கேயுள்ள விவசாயிகள் என்ன செய்கிறார்களென்றால் என்னுடைய நிலத்தில் 5 எக்கர் எடுத்துக்கொள்வதாகப் பதிவு செய்துகொள்ளுங்கள் என்று விண்ணப்பம் போடுகிறார்கள். அப்படி விண்ணப்பம் போட்டாலும் 5-6 வருஷங்களுக்கு மேலும் அனுமதி கிடைப்பதில்லை. ஒருவருக்கு 100 எக்கர் இருந்தாலும் அதில் ஐந்து எக்கரையாவது, 10 எக்கரையாவது பதிவு செய்துகொள்ளுங்கள் என்று கேட்கிறார்கள். ஒருவனுக்கு 100 எக்கர் இருந்தால் அதில் 60 எக்கரைப் பதிவு செய்துகொண்டு விட்டால் ஆண்டு தோறும் 60,000 ரூபாய் உத்தரவாதம் செய்வதாகப் பொருள். இதே நிலைமைதான் இன்று பல இடங்களிலும் இருக்கின்றது. எல்லா இடங்களிலும் பார்த்தால் விவசாயிகள் சர்க்கரை ஆலை எங்கள் பகுதிக்குத் தேவை,

எங்கள் பகுதிக்குத் தேவை என்று சொல்லுவதன் உண்மை நோக்கம் இதுதான். இதனால்தான் மற்ற சாகுபடியை விட்டு இதில் ஈடுபட்டால் கொள்ளை லாபம் வருகிறது என்று கரும்பு சாகுபடி செய்ய தாங்களாக முன்வருகிறார்கள். போதிய அளவு கரும்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உத்தரவாதமும் இருப்பதால் இதற்கு எதற்காக விதிவிலக்கு கொடுக்க வேண்டும் என்றுதான் நான் கேட்கிறேன். இன்றைய தினம் கோயமுத்தூரில் நூல் ஆலைகள் இருக்கின்றன. அவைகளுக்குப் பருத்தி சாகுபடிக்கு உத்தரவாதம் செய்யப்படவேண்டும். இன்றைய தினம் இங்கு உற்பத்தி போதாமல் ஈஜிப்ஷியன் காட்டன் வரவழைக்கின்றோம். போதிய அளவுக்கு மேல் கரும்பு இருக்கும்போது கரும்பு ஆலைகளுக்காக நிலங்களுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் தெரியவில்லை. ஏற்கெனவே நமக்கு பஞ்சு பற்றுக்குறை இருக்கிறது, அப்படி பஞ்சுக்காக கோயமுத்தூரிலும் மற்ற மாவட்டங்களிலும் பருத்தி உற்பத்திக்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்கலாம். எந்த அடிப்படையில் கரும்புக்கு விதிவிலக்கு வேண்டுமென்று சொல்லுகிறார்கள், அதற்கான உண்மையான தேவையை தயவுசெய்து தெளிவாக்க வேண்டுமென்று கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத் தெரிந்த வரையில் கரும்பு சாகுபடிக்கு வேண்டிய நிலங்கள் விஷயத்தில் எதுவும் பிரச்னை இருப்பதாகத் தெரியவில்லை. இன்றைய தினம் சேலத்தில் ஒரு சர்க்கரை ஆலை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். திருச்சியில் புகலூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆம்பூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. நெல் சாகுபடியைவிட, புன்செய் பயிர்கள் சாகுபடி செய்வதைவிட, எந்த பணப்பயிரையும் சாகுபடிசெய்வதை விட, கரும்பு சாகுபடி செய்து சர்க்கரை ஆலைக்குக் கொடுப்பது மிகவும் லாபகரமானது. கரும்பு பயிரிடுதவற்கு எல்லா விவசாயிகளும் முன்வருவார்கள். இதற்கு நிச்சயமாக விதிவிலக்கு தேவையில்லை. இத்தகைய பிரச்னைகள் பிற்காலத்தில் ஏற்பட்டு, நமது மாநிலத்தில் அதிகப்படியான கரும்பு ஆலைகள் ஏற்பட்டு, அப்போது கரும்பு சாகுபடி செய்வதற்குப் போதுமான நிலம் கிடைக்கவில்லையென்றால் இந்தச் சட்டத்தை எந்த நேரத்திலும் திருத்திக் கொள்ளலாம். நாம் இல்லாவிட்டாலும் அந்த நேரத்தில் வேறு யார் இருந்தாலும் திருத்திக் கொள்வார்கள். ஆகையால் இதற்கு விதி விலக்கு அளிப்பதற்கு நியாயமான காரணம் சொல்வதற்கில்லை என்ற காரணத்தினால் இந்த "சேப்டர்" பூராவையும் நீக்கவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.

SRIMATHI T. N. ANANDANAYAKI : கனம் சபாநாயகர் அவர்களே, இதிலே லாண்ட் போர்ட் ஷுகர் போர்ட், என்றெல்லாம் வைத்திருக்கிறார்கள். இந்தச் சட்டத்திலே லாண்ட் போர்ட், ஷுகர் போர்ட், லாண்ட் ட்ரிப்யூனல் ஆகிய இந்த மூன்றிலேயும் அங்கத்தினர்களாக உயர் நீதி மன்ற நீதிபதிகளாக இருந்தவர்களைப் போட்டு அமைக்கவேண்டுமென்று இருக்கிறது. எனக்கு என்னபடுகிறது என்றால் இவ்வளவு போர்டுகளும் தேவையா என்பது தான். காரணம் லாண்ட் போர்டிலே குறைந்த அளவுதான் வேலை இருக்கும். இனிமேல்தான் டைரி ஃபார்மிங்குக்காகவும் லைவ் ஸ்டாக் ப்ரீடிங்குக்காகவும் அப்ளிகேஷன் போடவேண்டும். ஷுகர் போர்டு கரும்பு சாகுபடிக்கு நிலம் தேவையா என்பதைப் பற்றி யோசிக்க வேண்டுமென்பதற்காக உள்ளது. இப்போது இந்த இரண்டு வேலைகளையும் ஒரே போர்டு செய்யலாம். ஒரு போர்டில் ரிட்டயர்ட் ஹைகோர்ட் ஜட்ஜ் இருக்கவேண்டுமென்று வைத்திருக்கிறோம். அந்த அளவுக்கு ஒரு உயர்ந்த பதவியை வகித்தவரைப் போடும்போது, அதுவும் வேலை குறைவாக இருக்கும்போது, இரண்டு போர்டு போட்டு, இரண்டு அதிகாரி போட்டு, இரண்டு எஸ்டாப்ளிஷ்மெண்ட் வைத்து, இரண்டு செலவு அவசியமா என்று அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று சொல்லுவதற்காகத் தான் நான் பேச ஆரம்பித்தேன். இந்தத் திருத்தத்தையும் அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் லாண்ட் போர்டே ஷுகர் ஃபாக்டரி போர்டின் வேலையையும் பார்க்கலாம். லைவ்ஸ்டாக் க்வெஸ்டின் போக பாக்கி நேரத்தில் ஷுகர்

க்வெஸ்டினைப் பாரக்கலாம். லைவ்ஸ்டாக் க்வெஸ்டின் வருஷம் 365 நாட்களுக்கும் இருக்கப்போவதில்லை. இரண்டையும் ஒரே போர்டாக வைத்து, ஒரே நீதிபதியை வைத்து, லைவ்ஸ்டாக் க்வெஸ்டின் வந்தால் டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பண்ட்ரி மெம்பராகவும், ஷுகர்கேன் க்வெஸ்டின் வந்தால் டைரக்டர் ஆஃப் அக்ரிகல்சர் மெம்பராகவும் உட்கார்ந்து வேலையைப் பார்த்தால் போதுமானதாக இருக்கும். இப்போது எங்கு பார்த்தாலும் இக்கானமி என்று பேசிக்கொண்டிருக்கும் சமயத்திலே இம்மாதிரியாக செய்யலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

* SRI R. SRINIVASA IYER : ஸார், இந்த சர்க்கரை ஆலைகளில் இரண்டு தினுசு பண்ணியிருக்கிறோம் இந்தச் சட்டத்திலே. டேட் ஆஃப் கம்மென்ஸ்மென்டில் அதாவது 1960-ம் ஆண்டு எப்ரல் மாதம் 6-ம் தேதியில் இருக்கக்கூடிய ஃபாக்டரி ஒன்று. பின்னால் ஏற்படுத்தக்கூடிய ஃபாக்டரி இரண்டாவது. இந்த இரண்டு ஆலைகளும் நம் நாட்டுக்கு அவசியம் தான் என்பதைப் பற்றி ஒருவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். தீபாவளிக்கு இன்னும் $1\frac{1}{2}$ மாதம்தான் இருக்கிறது. இப்போது முதல் $\frac{1}{4}$ வீசை, $\frac{1}{2}$ வீசையாக வாங்கிச் சேர்த்துக்கொண்டிருந்தால் தான் சர்க்கரை இருக்கும். அப்புறம் கேட்டால் கிடைக்காது. இதிலே ப்ரைஸ் கண்ட்ரோல் கிடையாது. ஷுகர்கேன் உற்பத்தியாளர்கள் சங்கம் ஏற்படுத்திக்கொண்டு விலையை ஏற்றிக்கொண்டிருக்கிறார்கள். கூலியை ஜாஸ்தி கேள் என்று ஒரு பக்கம், அதனால் விலை ஜாஸ்தி ஆகின்றது. பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும் நமது உற்பத்திச் செலவு ஜாஸ்தியாக இருக்கிறது. அதனால் நஷ்டத்தில் விற்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அதே நேரத்தில் தமிழ் நாட்டில் பற்றாக்குறை. அடுத்த மாநிலங்களிலிருந்து வந்தால் தான் இங்கே சர்க்கரை. சர்க்கரையை எக்ஸ்போர்ட் செய்யும் நிலைமை வர வேண்டும். பொது மக்களுக்கு விலைவாசி உயர்ந்து போகிறது என்று சொல்லுகிறார்கள். அவர்களைத் திருப்தி செய்ய விலைவாசியைக் குறைக்க வேண்டும். இதிலே ப்ளாக் மார்க்கெட் வேறு. ஒருவர் 3 ரூபாய்க்கு ஒரு வீசை சர்க்கரை வாங்கியதாகச் சொன்னார். இந்த நிலைமையில் உணவு உற்பத்தி என்றால் சர்க்கரையும் உணவு தான். முந்திய தினத்தில் யாரோ உப்பு போட்டு ஹோட்டலில் காப்பி கொடுத்தார்கள் என்று சொன்னார்கள். அப்படி உப்பு போட்டு காப்பி சாப்பிட முடியுமா? காப்பி சாப்பிட்டாகவேண்டும். காப்பி சாப்பிடும் பழக்கத்தை நிறுத்தி பழையதை சாப்பிட ஆரம்பிக்கத் தான் முடியுமா? காப்பி உற்பத்தி ஜாஸ்தியாகவேண்டும். காப்பி சாப்பிட்டாக வேண்டும். சர்க்கரைப் பண்டங்கள் வேறு சாப்பிட்டாக வேண்டியிருக்கிறது. ஹோட்டலில் போய் உட்கார்ந்தால் ஸ்வீட் கொண்டு வா என்று சொல்லும் நிலைமையில் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொண்டிருக்கிறோம். ஆகையால் சர்க்கரை தேவையாக இருக்கிறது..............

DEPUTY SPEAKER : This is about constitution and functions of the Sugar Factory Board. The hon. Member should stick to that.

SRI R. SRINIVASA IYER : கனம் அங்கத்தினர் பருத்தியைப் பற்றிப் பேசினார். நான் கரும்பைப் பற்றிப் பேசுகிறேன். வேறு ஒன்றுமில்லை.

DEPUTY SPEAKER : கான்ஸ்ட்டிட்யூஷன் ஆப் ஷுகர் பாக்டரி போர்டு பற்றி மட்டும் பேசினால் நன்றாக இருக்கும்.

SRI R. SRINIVASA IYER : பருத்தி சாகுபடிக்கு போர்டு போடலாமா, நிலம் ஒதுக்கலாமா என்றெல்லாம் பேசினார்கள். அதற்கு பதில் சொல்லும் முறையில் தான் பேசினேன். கான்ஸ்ட்டிட்யூஹன் ஆஃப் ஷுகர். போர்டு அவசியம் தான். இப்போது இருக்கக்கூடிய நிலம் போதுமா, நல்ல முறையில் அதில் சாகுபடி செய்யமுடியுமா என்று ஆலோசனை

செய்ய இந்த போர்டு தேவையில்லாதது போல் பேசியதால், ஷுகர் அவசியம், ஷுகர் ஃபாக்டரி அவசியம், ஷுகர் கேன் சாகுபடி அவசியம், நிலம் ஒதுக்க வேண்டியது அவசியம், நிபுணர்கள் பார்த்து ஒதுக்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொள்கிறேன். இப்போது இருக்கக்கூடிய ஆலைகளுக்கே போதுமான விஸ்தீர்ணம் கரும்பு சாகுபடி இல்லை. "புல் கபாஸிடி" வேலை செய்ய முடியவில்லை. "புல் கபாஸிடி" வேலை செய்தால், விலை குறையும். இதையெல்லாம் ஏற்பாடு செய்வதற்காகத் தான் இந்த ஷுகர் போர்டுக்கான சட்டம் போடப்பட்டு இருக்கிறது. இப்போது உள்ள ஷுகர் பாக்டரிகளுக்கு என்னென்ன செய்ய வேண்டும். வரப்போகிற ஷுகர் பாக்டரிகளுக்கு என்னென்ன செய்ய வேண்டுமென்பதற்காகவே இந்தச் சட்டம் போடப்பட்டிருக்கிறது. ஷுகர் போர்டு அவசியமில்லை என்று சொல்லப்பட்டது. நமக்கு ஷுகர் அவசியம். அப்போது ஷுகர் போர்டும் அவசியம். ஆகவே இந்த ஷுகர் போர்டு கான்ஸ்டிட்யூஷன் சரியான முறையில் தான் இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

Sri A. GOVINDASAMY : சட்டமன்ற உதவித் தலைவர் அவர்களே, ஆலைகளுக்கு நிலங்கள் தனியாருக்கு ஒதுக்குகின்ற விஷயத்தில் நாங்கள் ஏற்கெனவே எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே, இந்த ஷுகர் போர்டு அவசியமில்லை என்ற நிலைமையில் தான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். அதே நேரத்தில் நம்முடைய நாட்டுக்கு அதிக சர்க்கரை ஆலை தேவையா, இல்லையா என்ற கேள்வி எழுமானால், அதிகப்படியான சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கருத்தை இந்த மன்றத்திலே நான் ஏற்கெனவே வலியுறுத்திக் கூறி வந்திருக்கிறேன். உத்திரப் பிரதேசத்தில் 69 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. அதே போல் பீஹார் மாகாணத்திலே 22 சர்க்கரை ஆலைகள் இருக்கின்றன. ஆனால் நம் தமிழ்நாட்டைப் பார்க்கிற போது, 6 அல்லது 8 ஆலைகள் இருக்கக்கூடிய நிலைமையைத் தான் நாம் பார்க்க முடிகின்றது. இன்னும் 5, 6 ஆலைகள் மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்திலே வருகின்ற நிலைமை இருக்கிறது. அப்படி வருகின்ற ஆலைகள் எல்லாம் கூட்டுறவு முறையிலே அமைவதென்றால், அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் தனியார் துறையிலே இப்போது நில உச்ச வரம்பு சட்டத்திற்கு கட்டுப்பட்டிருக்கின்ற சில மிராசுதார்கள் இந்த சர்க்கரை ஆலைகளை வைக்க இருக்கிறார்கள் என்று சொல்லி அதற்கு நிலத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்காக இந்த ஷுகர் போர்டு உதவும் என்ற வகையிலே தான் இந்த போர்டு அவசியமில்லை என்று சொல்லவேண்டியிருக்கிறது. அப்படியில்லாமல் உச்சவரம்பிலிருந்து எடுக்கக்கூடிய நிலத்தை விவசாயிகளுக்கு கொடுத்து, மிராசுதார்கள் பின்னாலே அவர்களிடமிருந்து ஆக்கிரமிப்பு செய்யாத நிலைமை ஏற்படுமானால், அப்போது ஆட்சேபிக்கவேண்டிய தேவை ஏற்படாது. ஆனால் அப்படியில்லாமல் அவர்களிடம் பின்னால் ஆக்கிரமித்துக் கொள்வதற்காகவும், பிறர் பேரிலுள்ளதை தங்கள் பேருக்கு இதிலே மாற்றிக்கொள்வதற்காகவும் உள்ள ஏற்பாடு இதனால் ஏற்படக்கூடும் என்பதால் தான் இதை நாங்கள் ஆட்சேபிக்கக்கூடியவர்களாகவும், ஆகவே இதற்காக ஒரு ஷுகர் போர்டு தேவை இல்லை என்று சொல்லக்கூடியவர்களாகவும் இருக்கிறோம்.

சர்க்கரை ஆலைகள் வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஆனால் சர்க்கரை போர்டு மட்டும் தேவையில்லை என்று சொல்கிறீர்களே, இது எப்படிப் பொருந்தும் என்று கேட்கலாம். தனிப்பட்ட விவசாயிகளுக்கு வேண்டுமானால், நில உச்ச வரம்புக்கு அப்பாலே அவர்கள் கரும்பு சாகுபடிசெய்யலாம் என்று நிலத்தை ஒதுக்கக்கூடிய நிலை இருந்தால் அதனால் ஓரளவு அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியும். அப்படி விவசாயிகளுக்கு உதவி செய்யாமல், ஒரு தனிப்பட்ட மிராசுதாரர்களுக்கு கரும்பு சாகுபடி செய்துகொள்வதற்கு, கரும்புக்கு பதிவு செய்துகொள்ளக்கூடிய நேரத்தில், அதனால் ஏழை, எளிய விவசாயிகளும், நடுத்தர விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினாலே, இந்த ஆலைகளுக்கு, ஆலை முதலாளி

களுக்கு நிலத்தில் அவர்கள் உரிமை இருக்கவேண்டுமானால், ஏழை விவசாயிகளுக்கு அதிலே பதிவு செய்துகொள்ளக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்த வேண்டும். அப்படி இல்லாமல் பாதகம் விளைவிப்பதாக இருப்பதால், இந்த ஷுகர் போர்டு தேவையில்லை என்றும், இது தனிப்பட்டவர்களுக்குத் தான் விதிவிலக்களிக்க உதவி செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொண்டு, இதை நான் எதிர்க்கிறேன்.

